# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஜூலை.24 - ஜூலை.30, 2013 பக்கம் - 24 30/-

## காதலர்களுக்கு மட்டும்

- புதிய பகுதி



## கறுப்பு ஜூலை

# கொலையுதிர் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லஞ்சமோ லஞ்சம்!

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது காவல்த் துறையின் பிரதான கடமையாகும். எந்த ஒரு தனிநபரோ அல்லது ஒரு நிறுவனமோ சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவதாகக் கருதப்படும் போது அதை விசாரணை செய்வதும் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்துவதும் பொலிஸாரின் கடமைதான். அதற்கான அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படுள்ளது.

அண்மையில் 'ட்றான்ஸ்பேறன்ற் இன்ரநஸ்னல்' என்ற ஒரு சர்வதேச அமைப்பு ஒரு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது. இதன் படி இலங்கையில் லஞ்ச ஊழல் நடவடிக்கைகளில் பொலிஸார் 44 வீதமும் நீதிப் பிரிவு 22 வீதமுமாக சாதனை படைத்திருப்பதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

இதில் பொலிஸ் திணைக்களம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டிலும் நிதிப்பிரிவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலும் செயற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இருவருமே நாட்டின் உச்சகட்ட அதிகாரம் கொண்டவர்கள். எனினும் இவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள திணைக்களங்களும் லஞ்ச ஊழலில் உள்ள கட்டர் சாதனையை எப்படித் தொட்டுள்ளன.

பொலிஸ்திணைக்களம் தொடர்பான மேற்படி தகவல்கள் பொதுமக்களைப் பொறுத்தவரையில் ஆச்சரியமளிப்பவையல்ல. லஞ்சம் வாங்குவது சட்டப்படி குற்றம் தான். ஆனால் லஞ்சம் வாங்குபவர்களோ கொடுப்பவர்களோ அதைக் குற்றமாகக் கருதுவதில்லை. அவ்வளவு தூரம் லஞ்ச ஊழல் வாழ்வின் இயல்பான ஒன்றாக மாறிவிட்டது.

எனவே தான் இந்தியா லஞ்ச ஊழலில் உலகிலேயே முதலிடத்தையும் இலங்கை இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன. இவ்விடயம் சர்வதேச ஆய்வுகளில் வெளிவருமளவுக்குப் பிரபலம் பெற்றுவிட்டது.

இடையிடையே கஞ்சிக்குப் பயறு போன்ற சிலர் கைது செய்யப்படுவதுமுண்டு. ஆனால்பெரும்லஞ்சமுதலைகள் பெரும் தொகைகளை விழுங்கிவிட்டு சுதந்திரமாக உலா வருகின்றன.

பொலிஸ் திணைக்களத்தில் உச்ச அதிகாரம் கொண்ட பதவியை வகிப்பவர் பொலிஸ் மா அதிபர். அவருக்கு அடுத்த அதிகாரம் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குப் பொலிஸ்தொடர்பான மாவட்ட மட்டத்திலான அதிகாரம் அவரின் பொறுப்பில்!

கொழும்புவடக்கின்பிரதிப்பொலிஸ்மா அதிபராகப் பதவி வகித்தவர் வாஸ் குணவர்தனா. அவரும் அவரின் கீழ் பணியாற்றிய மூன்று பொலிஸாரும் கூலிக்கு ஒரு கோடீஸ்வர வர்த்தகரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கூலிக்குக் கொலை செய்வது இதுவரை பாதாள உலகக் குழுவினராலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. அவர்களைத் தேடிக்கண்டுபிடித்துக் கைது செய்யும் கடமை பொலிஸாருக்குரியது. ஆனால் கூலிக்கு கொலை செய்யும் கைங்கரியங்களில் பொலிஸ்அதிகாரிகளே இறங்கிவிட்டனர்.

இப்படியான நிலையில் நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியுமா? நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்ட முடியுமா?

இவ்வாறு திருகோணமலைப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி வர்த்தகர் ஒருவரிடம் பத்தாயிரம் ரூபா லஞ்சம் பெறும் போது கையும் மெய்யுமாக லஞ்சத் தடுப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றங்களைத் தடுக்க மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெறும் அதிகாரியே குற்றக்கூண்டில் ஏற்றப்படவுள்ளார்.

நவீன முறையிலான களவுகளுக்கும் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்குவதுண்டு. தென்னிலங்கையின் லீசிங் நிறுவனப் பிரதிநிதி எனக்கூறி ஒருவர் வாடகைக் கொள்வனவுக்குப் பெறப்பட்ட ஒரு வாகனத்தை கொள்ளையிட்டும் சென்றிருக்கிறார். இக்கொள்ளைக்கு உதவி வழங்கிய ஒரு பொலிஸாரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மக்களை சட்ட விரோத நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க வேண்டியவர்களே தங்கள் பதவியின் பெறுமதியைப் பாவித்து கொலை, கொள்ளை, லஞ்சம் எனப் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

■ அக்கினிக்குமாரன்

## இது மட்டுமல்ல!

மக்களால்தெரிவு செய்யப்படும்மாகாண சபை உறுப்பினர்கள் பிரதேச சபைகளின் தலைவர்கள் எனப் பலரும் லஞ்சம் காடைத்தனம் போன்ற குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சர் மேர்வின் சில்வா மகாகாண சபை உறுப்பினர் ஆனந்த சரத்குமார குமார் போன்றோர் திடிரென நீதிபதிகளாக மாறி பொதுமக்களுக்கு விசாரணைகள் இன்றியே தண்டனைகளை வழங்குவதுண்டு.

ஜனநாயக நாடு எனச் சொல்லப்படும் இலங்கையில் கொலை, கொள்ளை , காடைத்தனம், லஞ்சம், ஊழல் போன்ற பலவிதமான சட்டவிரோத நடவடிக்கைகளும் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்களாலேயே மேற்கொள்ளப்படுகிறன்றன என்றால் இவற்றுக்கான அடிப்படைக்காரணம் என்ன? இதற்கான துணிச்சலைக் கொடுத்தவர் யார்?

அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என ஒரு பழமொழி உண்டு. இது இலங்கையைப் பொறுத்தவரை உண்மையாக இருக்குமோ என்ற கேள்வி எழுகிறது.

மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு போதிய பெரும்பான்மைப் பலம் இன்றியே ஆட்சியமைத்தது. இன்று அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உண்டு.

## எப்படி வந்தது இந்தப் பெரும்பான்மை?

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை முன் வைத்துத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் ஒரு சிலர் ஜே.வி.பி யினர். ஒரு சிலர் இன்னும் வேறு வேறு கட்சிகளில் நின்று வெற்றி பெற்றவர்கள். தங்களுக்கு வாக்களித்த மக்கள் வழங்கிய ஆணையைத் தூக்கி எறிந்து விட்டு தங்கள் கட்சிகளை உடைத்துக் கொண்டு அரசில் இணைந்தனர்.



## கொள்கைகள் காற்றில் பறந்தன! பதவிகள் கைக்கு வந்தன!

இன்று இலங்கையில் ஏறக்குறைய நூறு அமைச்சர்கள் வெண்ட அமைச்சரவை! இன்னும் ஜனாதிபதியின் ஆலோசகர்கள் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பார்க்குமிடமெங்கும் பதவிமயம்.

கொட்டிக்கிடக்கும் பதவிகள்! அவற்றில்குளித்துஎழும்பிக் கூத்தடிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள். வழமையாகப் பணம் லஞ்சமாக வழங்கினாலோ பெருமை. விழுங்கினால் அரசியல்.

ஒட்டு மொத்தத்தில் இன்று ஆட்சி அதிகாரபீடத்தில் இருப்பவர்கள் பதவிகளை லஞ்சமாகக் கொடுத்தவர்களும் பெற்றவர்களும் தான். இப்படியான நிலையில் ஏனையவர்கள் லஞ்சம் வாங்கப் பின்னிற்பார்களா? அல்லது கொடுப்பதை குற்றமாக நினைப்பார்களா? துரதிஸ்ட வசமாகச் சிலர் பிடிபடுவதுமுண்டு. அது ஒரு சிலர் மட்டும் தான்.

அதே வேளையில் லஞ்சம் போன்ற முறைகேடுகள் கோவைகளாகி நீண்ட துயிலில் ஆழ்ந்து விடுவதுண்டு. பழிவாங்க வேண்டிய தருணம் வந்ததும் அவை விழிப்படைந்து உருத்திர தாண்டவம் ஆடத்தொடங்கிவிடும்.

குறிப்பாக முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா அவர்கள் மிகச் செல்வாக்குடன் பதவி வகித்து வந்தவர். அவர் 'திவுனுகம' சட்டத்திற்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியது தான் தாமதம். தூங்கிக் கொண்டிருந்த அவரது கோவை விழித்துக் கொண்டது. உண்மையான சொத்து விபரங்களை சமர்ப்பிக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டில் பதவி விலக்கப்பட்டார். அவரின் கணவரும் தேசிய சேமிப்பு வங்கியின் பணத்தைத் தவறான முறையில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றில் நிறுத்தப்பட்டார். எனினும் 'திவுனுகம' தீர்ப்பு வரும்வரை அவர்கள் இருவருமே அதிகாரம் கொண்ட பதவிகளை வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சில அமைச்சர்கள் சீறி எழுவதும் பின் அடங்கிப்போவதும் இப்படியான கோவைகளின் மிரட்டல் காரணமாகவே என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.


எப்படியிருப்பினும் இன்று இலங்கையில் லஞ்சம், ஊழல், மேசடி, கொலை, கொள்ளை, கப்பம் என்பன அதிகாரம் படைத்தவர்களால் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு தேவைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் எல்லாச் சுமைகளையும் துன்பங்களையும் வேலிகளினால் மேயப்படும் பயிர்களாகப் பொதுமக்களே அனுபவிக்க வேண்டியுள்ளது.

**ஜனநாயக நாடு எனச் சொல்லப்படும்
இலங்கையில் கொலை, கொள்ளை, காடைத்தனம்,
லஞ்சம், ஊழல் போன்ற பலவிதமான சட்டவிரோத நடவடிக்
கைகளும் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்களாலேயே
மேற்கொள்ளப்படுகிறன்றன என்றால் இவற்றுக்கான
அடிப்படைக் காரணம் என்ன?
இதற்கான துணிச்சலைக் கொடுத்தவர் யார்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் மட்டும்....

இளையோருக்கான புதிய பகுதி!



## உலகின் முதல் காதலர்கள்

கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிள் சொல்வது உண்மையாக இருந்தால் உலக வரலாற்றின் முதல் காதலர்கள் ஆதாம்- ஏவாள் ஜோடிதான்.

கடவுள் முதல் மனிதனான ஆதாமைப் படைத்த போது அவனது விலா எலும்பில் இருந்து ஏவாள் என்ற பெண்ணையும் படைத்தான். இருவரையும் பூமிக்கு அனுப்பி வைத்தான். இருவரும் பாவம் செய்யாமல் வாழ கடவுள் சில நிபந்தனைகளை விதித்தார். அதில் முக்கியமானது ஆதாமும் ஏவாளும் உள்ள இடத்தில் வளர்ந்திருந்த அப்பிள் மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த கனிகளை மட்டும் உண்ணவே கூடாது என்பதுதான்.

ஏவாளைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு உணவு தேடப் புறப்பட்டுப் போனான் ஆதாம். தனிமையில் இருந்த ஏவாளை மரத்தில் இருந்த பாம்பொன்று நெருங்கியது. "கடவுளை நம்பாதே ஏவாள்! அவர் உங்களிடமிருந்து எப்போதும் இன்பம் தரக்கூடிய ஒன்றை மறைக்கிறார் என்றது பாம்பு. அப்படியா? எதை மறைக்கிறார் அவர்? என்று கேட்டாள் ஏவாள்.

இதோ இந்த அப்பிள் பழத்தை நீயும் உண்டு ஆதாமுக்கும் உண்ணக் கொடு. அதன்பின் தெரியும் நான் சொல்லும் இன்பம் எதுவென்று என ஆசை காட்டியது பாம்பு. ஏவாள் பாம்பை நம்பினாள் அதன் பேச்சை நம்பினாள். எட்டிப்பறித்தாள் அப்பிளை. ஒரு கடி. அப்பளின் இனிப்பில் மெய்மறந்தாள் ஏவாள். அப்பிளின் துண்டங்கள் உள்ளே செல்லச் செல்ல, அவளுக்குள் இனம்புரியாத ஏதோ இன்ப உணர்வு. அந்த உணர்வுதான் அவளை திடீரென வெட்கம் கொள்ள வைத்தது. தன்னுடல் நிர்வாணமாக இருப்பது அப்போதுதான் ஏவாளுக்குப் புரிந்தது.

தூரத்தே ஆதாம் வருவதைக் கண்டு, மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டாள். ஆதாமுக்கு ஏவாளின் இந்த புதுவித நடவடிக் கைகளுக்கு காரணம் புரியவில்லை. மரத்தின் பின்னிருந்தவாறே தன் கரங்களை நீட்டினாள் ஏவாள். அவளின் அன்பில் கடவுளின் கட்டளையை மறந்த ஆதாம், அப்பிளைக் கடித்தான் அடுத்த நொடியே



அவனுக்கும் ஏவாளுக்கும் ஏற்பட்ட அதே உணர்வு. உடலெல்லாம்ஜ்ன்னவோசெய்தது. உடையற்று ஏவாளைப் பார்க்கவே மனம் கூசியது. ஓடிச்சென்று இலைகுழைகளைப் பறித்து தனக்கும் ஏவாளுக்கும் உடைகள் செய்து அணிந்து கொண்டான் ஆதாம். அதன் பின்னரும் அந்த உணர்வு அவர்கள் இருவரையும் விட்டு நீங்கவில்லை. இருவரும் காதலில் விழுந்தனர். தங்களை மறந்தனர். உலகின் முதல்க் காதல் அங்கே பிறப்பெடுத்தது. அதன்பின் கடவுளின் சாபப்படி இனப்பெருக்கம், சாவு என்பன அவர்களையும், அவர்கள் வழி வந்த மனிதர்களையும் பின் தொடர்ந்தன.

ஆதாம்-ஏவாள் இல்லாவிட்டால், ஏவாள் அந்த அப்பிளை கடித்திராவிட்டால், இன்று உலகில் காதல் இருந்திருக்குமா? காதல் என்ற மகத்தான உணர்வினை அறியாமலே மனிதன் மாண்டிருக்கக் கூடும். ஆகவே அப்பிளை உண்ணக் கொடுத்த பாம்புக்கு உலகக் காதலர்கள் நன்றி சொல்ல வேண்டும்.

உலகம் இயங்கிக் கொண்டிருப்பதே காதல் என்ற உணர்வால்தான். தனியே ஆண், பெண் சார்ந்த பாலியல் நோக்குடைய உறவு நிலை தவிர்த்து உறவுகள் மீதான, இயற்கை மீதான, விலங்குகள் மீதான பரியமும் காதல் தான். எனவே இன்றைய உலகில் தவிர்க்கமுடியாத உணர்வுநிலையான காதலைப்பற்றிய சுவாரசியமான விடயங்கள், விவாதங்கள், கதைகள், கவிதைகள், புகழ்பெற்ற காதலர்கள் பற்றிய அறிமுகங்கள், தற்போதைய காதல் சம்பவங்கள், காதல் சந்தேகங்களும் தீர்வுகளும், காதல் பற்றிய வினோதத் தகவல்கள் என்று எல்லாவற்றையும் தருவதற்காக இளையவர்களுக்காக இந்தவாரம் முதல் சுடர் ஒளியில் காதலர்கள் மட்டும் என்ற புதிய பகுதியை ஆரம்பத்துள்ளோம். நீங்களும் காதலர்கள் மட்டும் பகுதிக்கான படைப்புக்களை எழுதி அனுப்பலாம்.)

## காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

காதலித்தவர்கள் பலருக்கும் உள்ள பரச்சினையே தங்களின் பிரியத்துக்குரியவர்களுக்கு என்ன கொடுக்கலாம் என்பதுதான். நீண்டநாள் தவமிருப்பு, பின் தொடர்தல் என்பவற்றின் முடிவில் கிடைத்த தங்கள் காதலிக்கு அல்லது காதலனுக்கு தம் நினைவாக, அன்பின் அடையாளமாக என்ன பரிசு கொடுக்கலாம் என்று தலையைப் போட்டுப் பிய்த்துக் கொள்ளாத காதலர்கள் உலகில்க் கிடையாது. அதுவும் தங்கள் காதலருக்குக் கொடுக்கும் முதல்ப் பரிசு, என்றென்றைக்கும் தன் நினைவாக அவரிடத்தே இருக்க வேண்டுமென்பதற்காக எவ்வளவு பணமென்றாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், ஏதாவது நினைவுச் சின்னத்தை வாங்கிப் பரிசளிக்கத் துடிப்பார்கள். அப்படி வாங்கிவிட்டாலும் கூட இது என் பிரியமானவளுக்கு/ பிரியமானவனுக்குப் பிடிக்குமா? என்ற கேள்வி அதைக் கொடுக்கும் வரை வட்டமிட்டுக் கொண்டே இருக்கும். இது கொடுப்பவரின் நிலை என்றால் அந்தப் பரிசை வாங்குபவரின் நிலை வேறுவிதம் தன் காதலன்/காதலி தரும் பரிசு தனக்குப் பிடிக்காவிட்டாலும் கூட அதனைப் பிடித்தது போல வாங்கிவிடுவார்கள். இன்னும் சிலர்



ஐயோ! இது வா எனக்கு ஒருக் கா லும் இது பிடிக்காதே என்று முகத்துக்கு நேரே சொல்லித் தம் ஜோடியின் முகத்தை அடுத்த நொடியே வாடச் செய்து விடுவார்கள். இப்போது உங்களுக்கு ஒரு சவால். உங்கள் வாழ்வில் அல்லது உங்கள் நண்பர்கள் வாழ்வில் இது போன்ற காதல் பரிசுகள் பற்றிய சுவாரசி யமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை எழுதி அனுப்புங்கள்.

வாரம் தோறும் அவற்றில் பிரசுரமாகும் படைப்புக்கு பரிசுகள் காத்திருக்கின்றன. காதல் பரிசு உங்களுக்கும் தரப்போகிறது பரிசு. காதல்பரிசு பற்றிய சம்பவங்களை 100 சொற்களுக்கு மேற்படாமல் இருக்தல் வேண்டும்.

காதல் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
*என்ற முகவரிக்கு உடனே அனுப்பி வையுங்கள்.*

## எம்.ஜி.ஆரின் காதலி



ராஜ முக்தி என்ற படத்தில் நடித்த போதுதான் எம்.ஜி.ஆரும், வி.என். ஜானகியும் முதன் முதலாக நேரில் சந்தித்துக் கொண்டனர்.

அதன் பின்னர் மருதநாட்டு இளவரசி படத்திலும், எம்.ஜி.ஆரும், வி.என்.ஜானகியும் இணைந்து நடித்தனர். படம் மாபெரும் வெற்றி பெற்றது.

இதன் போது இருவருக்கிடையே காதல் தோன்றியது. அதைத் தொடர்ந்து, ஜானகியை தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்க எம்.ஜி.ஆர். தீர்மானித்தார். அதற்கு முன் மனைவியின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டார். சதானந் தவதியும் தன் தங்கை போலவே ஜானகியை ஏற்றுக் கொண்டார்.

பிரபல பாடலாசிரியராகத் திகழ்ந்த பாபநாசம் சிவனின் அண்ணன் பி.ஆர். ராஜகோபாலய்யரின் மகள்தான் வி.என்.ஜானகி. (வைக்கம் நாராயணி ஜானகி என்பதன் சுருக்கமே வி.என்.ஜானகி) அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆரை விடவும் ஜானகிதான் புகழ் பெற்றிருந்தார். எம்.ஜி.ஆரைக் கைபிடித்ததும் நடிப்புக்கு முழுக்குப் போட்டார். எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின்னர் தமிழகத்தில் முதலாவது பெண் முதலமைச்சராகப் பதவி ஏற்றார் ஜானகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தப் புதியவர்கள் பேசப்போகும் அரசியலும்,புதிதாக இருக்கவேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். இதுவரைக்குமான தேர்தல் அரசியலாக இருந்தாலும், வெள்ளைவேட்டி அரசியலாயினும் அவர்கள் பயணித்த, முன்மொழிந்த அரசியலால் தமிழர்களுக்கு எந்த இலாபமும் கிடைக்கவில்லை. மலையளவான எதிர்பார்ப்புக்களுடனேயே வாக்குவங்கிகளை நிரப்பிக் கொடுக்கும் பணியை மக்கள் செய்தனர். ஆனால் ஒவ்வொரு தடவையும் அவர்களின் நம்பிக்கை மீது சூனியமே வைக்கப்பட்டது. தேர்தல் காலங்களில் மட்டும் மக்களின் பக்கம் வருவதும், அவர்கள் நலன் குறித்து பேசுவதும், தமக்கு நலன் இருக்கும் போராட்டங்களுக்கு மட்டும் மக்களை பயன்படுத்திவிட்டு கலைந்து செல்வதும்தான் இவர்களின் கடந்தகால அரசியல். அல்லது மக்களாக முன்வந்து போராடக் களமிறங்கும்போது அதற்கு கட்சிப் பதாகைகளுடன் இறங்கி அவர்களைக் குழப்பிவிடும் பணியையே செய்து வந்திருக்கின்றனர். இதுபோன்ற அரசியல் ஒழுங்கீனங்களையும், தவறுகளையும் கலைந்த அல்லது மறந்த புதிய தலைமுறையின் பிரவேசம் ஈழ ஜனநாயக அரசியல் வெளிக்கு அவசியப்படுகின்றது.**


# புதிய பலவான்கள் அறிமுகம்!

இழுபறிகள், விட்டுக் கொடுப்புகள், போட்டுத்தாக்கல்களைத் தவிர்த்து சில நல்ல விடயங்களையும் வடமாகாணசபைத் தேர்தல் குறித்து பதிவிடல் வேண்டும். நண்டுக் கருவாடான ஒரு தீர்வுத் திட்டத்தை - அதாவது 13 சீர்திருத்தத்தை முதன்மைப்படுத்திய நிர்வாக அலகைக் கைப்பற்றிக் கொள்வதற்கான இந்துப் போட்டியில் சில அரிய நன்மைதரும் விடயங்கள் இருப்பதைக் கவனிப்பது நன்று. அதில் முதன்மையானது இந்தத் தேர்தலில் புதுமுகங்கள் அறிமுகமாவது.

இதுவரை அரசியல் அனுபவமற்ற மக்கள் மத்தியில் அரசியல்வாதியென்ற அடையாளத்தோடு அறிமுகப்படாத ஒரு தொகுதியினரும் களத்தில் குதிக்கின்றனர். ஒருவகையில் இவர்கள் புத்தூக்கிகள். துரோகத்தனங்களும், காட்டிக் கொடுப்புக்களும், பதவிவெறியும் பிடித்திருக்கின்ற தமிழ் அரசியல் சூழலில் இந்த எண்ணங்கள் எதிலும் அகப்படாது மேடைக்கு வந்திருப்பவர்கள். இவர்களது புதிய குரல்கள் முன்மொழியும் அரசியல் புதியவையாக இருக்கவேண்டும். பழைய மொந்தையில் புதிய கள்ளாக இருந்தால் இவர்களும் மரபு ரீதியான தமிழ் அரசியல்வாதிகளுக்கு விதிவிலக்கானவர்களாக இருக்கமுடியாதுபோகும்.

ஒருவகையில் வடக்கிலிருந்து அறிமுகமாகவிருக்கும் இந்த அரசியல்வாதிகள் இளமையானவர்கள். புது இளரத்தங்கள். வட பகுதி தமிழரின் துயரப் பாதையின் ஒரு அந்தத்தையாவது தொட்டுப் பார்த்தவர்கள். கூடப் பயணித்தவர்கள். சிந்தப்பட்ட தமிழ் இரத்தத்தின், குடிக்கப்பட்ட தமிழ் உயிரின் நேரடி உரித்துடையவர்கள். எனவே இவர்களுக்கு இங்கிருக்கின்ற தமிழர்கள் எதை விரும்புகின்றனர்? எதை நிராகரிக்கின்றனர் என்பது தெளிவாகவே தெரிந்திருக்கும். அதைக் கவனத்தில் கொண்டு செயற்பட்டாலே உண்மையான நிலைத்திருப்பை பெறமுடியும்.

தமிழ் சினிமாவில் தற்போது ஒரு போக்கு(Trend) உருவாகியிருக்கின்றது. நாளாந்தம் அறிமுகமாகும் கதாநாயகர்கள் முதலில் அறிமுகமாகும்போது நல்ல சினிமாவையே தேர்ந்தெடுக்கின்றனர். உதாரணத்துக்கு கார்த்தி தெரிவு செய்த பருத்திவீரன்போல. அந்தத் திரைப்படத்துடன் தமிழ் சினிமாவுக்கு நல்லதொரு நடிகர் கிடைத்திருப்பதாக கார்த்தியை வைத்து கட்டுரையெழுதினார்கள். ஆனால் அதில் அவரால் நிலைத்திருக்கமுடியவில்லை. விரைவாக கொமர்சியல், ஆக்சன் படங்களெனத் தாவினார். இப்போது முகவரி கலங்கிய இடத்தை நோக்கி போய்க் கொண்டிருப்பதை, அவர் நடித்து இறுதியாக வந்த அலக்ஸ் பாண்டியன் சொல்லிப் போனது. இந்த உதாரணத்தை புதிதாகக் களமிறங்கியிருக்கின்ற நம் அரசியல்வாதிகளும் பொருத்திப் பார்க்க வேண்டும். பன்றியோட சேர்ந்த பசுவுக்கு நேரும் கதியை அனைவருமே தவிர்த்துக் கொள்ள வேண்டும். உண்மையான, விசுவாசத்துடனேயே மக்கள் உங்களைத் தெரிவு செய்ய வருகின்றார்கள். பழையவர்கள் மீதிருந்த மொத்த நம்பிக்கையும் விடுபட்ட சூழலிலேயே அவர்களின் புதியதொரு அரசியல் சகாப்தம் ஆரம்பமாகியிருக்கின்றது. பதவியும், பொருளும், பணமும் புதியவர்களை இலகுவில் மடக்கி மட்டமாக்கிவிடும் என்பதும் அறியாத ஒன்றல்ல. ஆனாலும் ஈழத்தமிழினம் இழந்தவைகளுக்காக, தியாகங்களுக்காக கடுகளவேனும் உண்மையுடன் அரசியல் பணியாற்றுபவர்களை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.




இந்தப் புதியவர்கள் பேசப்போகும் அரசியலும்,புதிதாக இருக்கவேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். இதுவரைக்குமான தேர்தல் அரசியலாக இருந்தாலும், வெள்ளைவேட்டி அரசியலாயினும் அவர்கள் பயணித்த, முன்மொழிந்த அரசியலால் தமிழர்களுக்கு எந்த இலாபமும் கிடைக்கவில்லை. மலையளவான எதிர்பார்ப்புக்களுடனேயே வாக்குவங்கிகளை நிரப்பிக் கொடுக்கும் பணியை மக்கள் செய்தனர். ஆனால் ஒவ்வொரு தடவையும் அவர்களின் நம்பிக்கை மீது சூனியமே வைக்கப்பட்டது. தேர்தல் காலங்களில் மட்டும் மக்களின் பக்கம் வருவதும், அவர்கள் நலன் குறித்து பேசுவதும், தமக்கு நலன் இருக்கும் போராட்டங்களுக்கு மட்டும் மக்களை பயன்படுத்திவிட்டு கலைந்து செல்வதும்தான் இவர்களின் கடந்தகால அரசியல். அல்லது மக்களாக முன்வந்து போராடக் களமிறங்கும்போது அதற்கு கட்சிப் பதாகைகளுடன் இறங்கி அவர்களைக் குழப்பிவிடும் பணியையே செய்து வந்திருக்கின்றனர். இதுபோன்ற அரசியல் ஒழுங்கீனங்களையும், தவறுகளையும் கலைந்த அல்லது மறந்த புதிய தலைமுறையின் பிரவேசம் ஈழ ஜனநாயக அரசியல் வெளிக்கு அவசியப்படுகின்றது.

அபிவிருத்தி சார்ந்த விடயங்களிலும் புதியவர்களின் பார்வை புதிதானதாக இருக்கவேண்டும். றோட்டுப் போடுதலையும், உடைந்த கட்டடங்களை திருத்தி திறந்து வைப்பதையும், வங்கி திறப்பதையுமே போருக்கு பின்னரான அபிவிருத்தி என வடக்கு மக்கள் அடையாளம் கண்டிருக்கின்றனர். உண்மையில் பண்பாடு சார்ந்த அபிவிருத்தியே நிலைத்திருக்ககூடியது. பண்பாட்டை விடுத்து அபிவிருத்தியைப் பிரித்துப் பார்க்கமுடியாது. ஆனால் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திகள் இதற்கு விதிவிலக்கானவை. காரணம் இந்த அபிவிருத்திகளின் திட்டமிடலாளர்கள் நம் மண்ணுக்குரியவர்களில்லை. தெற்கில் வாழும் சிங்களவர்களாகவும், சீனர்களாகவுமே இருக்கின்றனர். இந்த பிராந்தியத்துக்கு ஒத்துவராத அபிவிருத்தியை இதுவரைக்குமான காலத்தில் பழைய அரசியல்வாதிகள் கவனத்தில் எடுக்கவில்லை. அதற்கும் தமக்கும் தொடர்பில்லாதது போல காட்டிக் கொண்டனர். ஆனால் புதியவர்களாக களமிறங்கக் காத்திருப்பவர்கள் இந்த தேசத்து மக்களினது பண்பாட்டினதும், சுற்றுச் சூழலினதும் பக்கம் நின்று அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

எல்லாம் இழந்த பின்னும் இறுதித் துரும்பாக கிடைத்திருப்பவை இந்த புதிய நட்சத்திரங்கள்தான். தேர்தல் நடந்தாலும், நடக்காவிட்டாலும் புறப்படத் தயாராயிருக்கின்ற இந்தப் புதிய அரசியல் சமூகம் நிலையானதொரு மாற்றத்துக்காக பாடுபடவேண்டும் என்பதே ஒவ்வொரு இந்நிலத்தவனதும் எதிர்பார்ப்பாகும்.

ஜெரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24, ஜூலை – 30, ஜூலை, 2013
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

## விமலின் முதலைக் கண்ணீர்!

ஆடு நனையுதென்று ஓநாய் அழுத கதையாக தமிழ்க் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு தொடர்பில் கண்ணீர் விட்டுக் கதறியிருக்கிறார் விமல் வீரவன்ச. வெளிநாட்டுச் சதி காரணமாகவே மாவை சேனாதிராசாவை ஒதுக்கி விட்டு சி.வி விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக கூட்டமைப்பு அறிவித்திருக்கிறது என்று அவர் ஒரு பாட்டம் புலம்பித் தீர்த்திருக்கிறார். ஏதோ மாவை சேனாதிராசா முதன்மை வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தால் தான் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்திருப்பார் என்பது போல அவரது கருத்து வெளிப்பாடு அமைந்திருக்கிறது.

உண்மையில் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் தொடர்பில் கட்சிக்குள்ளும், மக்களிடையேயும் சில சலசலப்புகள் ஆரம்பத்தில் இருந்தாலும் அவை தற்போது ஓயத் தொடங்கிவிட்டன. ஆனால் அதனை அப்படியே அமுங்கிப் போகவிடாமல் கூட்டமைப்புக்குள் தொடர்ந்தும் குத்து வெட்டுகள் நிகழ்வதாக காட்டிக் கொள்ளவே அமைச்சர் வீரவன்ச கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இப்போது கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல்கள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. ஆனால் அரசு தரப்பு வேட்பாளர்கள் தொடர்பில் தான் தேர்தலுக்குப் பின்னரும் இழுபறிகள் தொடரப் போகின்றன. ஏனெனில் அரசு தரப்பில் முதன்மை வேட்பாளராக விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவுக்கு ஒரு காலத்தில் பொறுப்பாக இருந்த தயா மாஸ்ரர் நிறுத்தப்பட்டிருக்கிறார். ஆனால் தேர்தலில் போட்டியிடாமலே குறுக்கு வழியில் முதல்வராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முனைவதாக இணையங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

அதனால் தான் தேர்தலில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலில் இடம்பெறாத ஒருவரை முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் அமைச்சரவையில் சமர்ப்பித்திருக்கிறார். ஏதேனும் அதிசயங்களோ மோசடிகளோ நிகழ்ந்து தப்பித்தவறி அரசு தரப்பு வடமாகாணத்தில் வாகை சூடினால் மாகாணசபையின் ஆயுட்காலம் முழுவதும் பெரும் குடுமிப்பிடிச் சண்டை அரசு தரப்புக்குள் நிகழப் போகிறது. அப்போது என்ன செய்யப்போகிறார் அமைச்சர் விமல்?

# மறக்கப்படும் கதைகள்!



அனுஷகன்

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வரும் எலும்புக் கூடுகள் போர்க்கால நினைவுகளை தமிழர் மனங்களில் தொடர்ந்தும் கிளறிவிட்டே வருகின்றன. தற்போது ஊர்காவற்றுறையிலும், இதற்கு முன் காங்கேசன்துறையிலும், அதற்கு முன் தீவகத்திலும் மீட்கப்பட்ட புதைகுழிகளின் கதைகள் பல துயரங்களையும் கொடுரங்களையும் தமக்குள்ளே கொண்டவை. இலங்கைத்தீவைப் போர் ஆக்கிரமித்திருந்த காலத்திலும் தமிழர் தேசம் ஆக்கிரமிப்பாளர்கள் கைகளில் சிக்கித் திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்ட பொழுதுகளிலும் போரைக் காரணம் காட்டி புலி முத்திரை குத்தப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட பல இளைஞர் யுவதிகள் காலஓட்டத்தில் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட அவலங்கள் கடந்த காலங்களில் நிறையவே பதிந்திருக்கின்றன.

இவற்றில் பலவற்றுக் கான விசாரணைகள் கிடப்பில் போடப்பட்ட போதிலும் சில மட்டும் இரசாயனப் பகுப்பாய்வுகள் தடயவியல் ஆய்வுகள் ரீதியில் ஆராயப்பட்ட போது அவை துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த அடை யாளங்களையும் அவற்றின் மண்டை ஓடுகள் கூரிய ஆயுதங்களால் துளைக்கப் பட்டு சேதமாக்கப் பட்டு வேட்டையாடப்பட்ட தடயங்களையும் வெளிப்படுத்தின.

செம்மணி,சூரியவெவ, அல்லைப்பிட்டி,மிருசுவில், கொடிகாமம், அம்பாறை என ஏராளமான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளுக்குள் மறைந்திருக் கும் உண்மைகள் இதுவரை வெளிப்படுத்தப் படவில்லை. புதைகுழிகள் கண்டறியப்பட்டவுடன் அதுபற்றிய கதைகள் முழுமூச்சில் பரவும். பின்னர் விசாரணைக்குழு அமைக்கப்படும் என அறிக்கையிடப்படும். எனினும் காலம்செல்லச்செல்ல அவை ஆறிய கஞ்சி பழம் கஞ்சியாக விசாரணை பற்றிய சாட்சியங் கள், அறிக்கைகள் குப்பைக்கூடைக்குள் கடாசப்பட்டுவிடும்.

இந்தநிலையில் போர் முடிவடைந் துள்ளதாக அறிவிக்கப்பட்ட இன்றைய சூழலிலும் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வரும் எலும்புக் கூடுகள் பல்வேறு அச்ச உணர்வுகளைத் தமிழர் மனங்களில்ஏற்படுத்தி வருகிறன. குறிப்பாக யாழ்குடா நாட்டில் இனங்காணப்பட்ட புதைகுழிகள் பலவும் இராணுவ முகாம்களுக்கு அண்மையிலேயே இனங் காணப்பட்டிருந்தன. வடக்கில் மாத்திரமின்றி தென்னிலங்கையிலும் இவ்வாறு பல சம்பவங்கள் நடந்தேறி வந்தன. குறிப்பாக கடந்த சில மாதங்களுக்கு முன் மாத்தளை வைத்தியசாலைக்கு அண்மையில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருந்தன. இவை ஜே.வி.பி கிளர்ச்சியின் போது வேட்டையாடப்பட்ட சிங்கள இளைஞர்களுடையதா? என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. எனினும் ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் இப்போதைய பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் இருந்த படை முகாம் ஒன்று அங்கிருந்ததாக கூறப்படுகிறது. அந்த எலும்புக்கூடுகளின் இரசாயன பகுப் பாய்வு அறிக்கையே இதுவரை முடிவுறுத்தப்படாத நிலையில் அண்மையில் ஊர்காவற்றுறை பகுதியில் இனங் காணப்பட்டிருக்கும் எலும்புக் கூட்டுத் தொகுதிகள் பற்றிய ஆய்வுகள் நீதியாக நடைபெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த வாரம் ஊர்காவற்றுறை கரம்பொ மேற்குப் பகுதியில் ஆளரவமற்ற பகுதியில் மண்டை யோட்டின் பகுதிகளான கீழ்தாடை, மேற்தாடை, எலும்புகள், விலா எலும்புக்கூட்டின் பாகங்கள் என்பன ஊர்காவற்றுறை பொலிசாரால் மீட்கப்பட்டன. குறித்த எலும்புக் கூட்டை தற்செயலாகக் கண்ட பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்தே அப்பகுதிக்கு விரைந்து எலும்புக் கூடுகளை மீட்டதாக அறிக்கையிட்டிருக்கிறது ஊர்காவற்றுறை பொலிஸ். இந்தஎலும்புக் கூடுகள் இரசாயனப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தப் பட்டிருப்பதாகவும் அப்பகுப்பாய்வு அறிக்கைகள் வெளிவரும் இடத்தே அது யாருடையது? இவரின் மரணத்தின் பின்னால் உள்ள காரணம் என்ன? எந்த வகையில் மரணம் நிகழ்ந்தது? போன்ற உண்மைகளும் வெளி வரலாம் என பொலிஸ்தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

ஆனாலும் எலும்புக்கூட்டுத் தொகுதி மீட்கப்பட்டிருப்பதாக இனங்காணப்படும் இடத்தை அண்டிய பகுதியில் கடந்த கால அசாதாரண சூழ்நிலையின் போது பலர் காணாமல் போயிருந்தனர். அப்படி அடையாளமே தெரியாது போன ஒருவரின் எலும்புக்கூட்டுத் தொகுதி யாக இது இருக்கலாம் என அச்சமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

குறித்த எலும்புக் கூட்டு கண்டுபிடிக்கப்பட்ட பகுதியைத் தோண்டியபோது ஆண்கள் அணியும் உடைகள் உக்கியநிலையில் மீட்கப் பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் இப் பகுதியில் உறவினர் வீட்டிற்கு சென்ற முதியவர் ஒருவரும் காணாமல் போயிருந்தார். அது தொடர்பான முறைப்பாடு குறித்து முதியவரின் உறவினர்களால் ஊர்காவற்றுறைப் பொலிசில் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தது. எனவே இந்த எலும்புக்கூடு அவருடையதாக இருக்கலாம் என்ற சந்தேகமும் இருக்கிறது.

இதே போன்று கடந்த மே மாதமும் இளவாலைப் பகுதியில் இது போன்ற ஒரு எலும்புக்கூட்டுத் தொகுதி மலசலகூட குழி ஒன்றுக்குள் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டிருந்தது. ஆனால் பலமாதங்களைக் கடந்த நிலையிலும் இவ்எலும்புக்கூட்டுத் தொகுதி பற்றிய பகுப்பாய்வு அறிக்கைகள் இது வரை வெளிவரவில்லை அதேபோன்று இந்த எலும்புக் கூட்டின் கதையும் மறக்கப்பட்டுவிடுமா? காலம்தான் பதில் சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைஞன்

# வாலி :படைப்புகளில் வாழும் கவிஞர்!



பிரபல தமிழ் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞருமான வாலி கடந்த வாரம் (வியாழக்கிழமை) தனியார் மருத்துவமனை யொன்றில் காலமானார்.

அவருக்கு வயது 82. அவர் சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

கடந்த ஜூன் 8ஆம் திகதி அன்று வசந்தபாலனின் 'தெருக்கூத்து' படத்திற்காக ஏ.ஆர்.ரகுமான் இசையில் பாடல் எழுதிக்கொடுத்துவிட்டு வீடு திரும்பியவர், அன்று இரவே உடல்நலக்குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இடையில் அவரது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

ஆனால் அவர் உடல்நிலையில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டது.

தீவிர சிகிச்சை பயனளிக்காமல் கடந்த வியாழக்கிழமை மலை ஐந்து மணி அளவில் அவர் இறந்தார்.

ரங்கராஜன் என்ற இயற்பெயர் கொண்டவாலி பிறந்து, வளர்ந்தது திருவரங்கத்தில். தன் நண்பர்களின் துணையுடன் நேதாஜி என்னும் கையெழுத்துப் பத்திரிக்கையைத் துவக்கினார். அதன் முதல் பிரதியை வெளியிட்டவர் எழுத்தாளர் கல்கி.

வாலிக்கு ஓவியத்திலும் ஆர்வம் மிகுந்திருந்தது. நன்றாகப் படம் வரையும் திறமையும் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் ஆனந்த விகடனில் ஓவியங்களை வரைந்து கொண்டிருந்த மாலியைப் போலவே தானும் ஒரு ஓவியராக வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தவரிடம் அவருடைய பள்ளித் தோழர் ஒருவர் மாலியைப் போல நீயும் சிறந்த சித்திரக்காரனாக வரவேண்டும் என்றுகூறி வாலி என்னும் பெயரைச் சூட்டினார் என்று கூறப்படுகிறது.

வாலி ஏறத்தாழ ஐந்து தசாப்தங்களாக தமிழ்த் திரையுலகில் முக்கியமானதொரு ஆளுமையாக விளங்கினார். இவ்வளவு நீண்ட காலம் நிலைத்து நின்ற திரைப்படப் பாடலாசிரியர் வேறு எவரும் இல்லை என்கிறார் திரைப்பட ஆய்வாளர் வாமனன்.

## வாலி – சில வாழ்க்கைக் குறிப்புகள்!

1) காவியக் கவிஞர் என்றும் வாலிபக் கவிஞர் என்றும் தமிழுலகிலும் திரையுலகிலும் அழைக்கப்பட்டவர் கவிஞர் வாலி. எந்த சூழலுக்கும், எந்த மாதிரிப் பாடலையும் எழுதுவதில் அவருக்கு நிகரில்லை. கண்ணதாசன் காலத்தில் பாடல் எழுத வந்தவர், தலைமுறைகள் தாண்டி, இன்றுள்ள இளம் பாடலாசிரியர்களெல்லாம் வியந்து நிற்கும் வகையில் புதுமையான பாடல்கள் புனைந்தார்.

2) நண்பன் காரணம் வாலிக்கு கோபம் வரும்... ஆனால் ஈகோவை காட்டிக் கொள்ளவே மாட்டார். வயதில் சிறியவர் என்ற பேதம் பார்க்காமல் தோளில் கைபோட்டுப் பழகுவார். அதனால் எல்லோருக்குமே அவர் நண்பர்தான். ஆயிரம் படங்களுக்கு மேல், பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் எழுதிக் குவித்த வாலி, தன்மொழியறிவையும், உலக ஞானத்தையும் எப்போதும் புதுப்பித்துக் கொண்டே இருந்தார்.

3) எம்.ஜி.ஆருக்கு கொள்கை வகுப்பாளர் மாதிரிதான் வாலி திகழ்ந்தார். அவர் மனதில் நினைப்பதை அல்லது அவர் இயல்புக்கு எது சரி என்பதை உணர்ந்து பாடல் எழுதியவர் வாலி. எம்.ஜி.ஆரின் பெரும்பாலான படங்களுக்கு பாடல்கள் புனைந்தவர் வாலிதான். தம்பி நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று, நல்ல பேரை வாங்க வேண்டும் போன்ற எண்ணற்ற கொள்கைப் பாடல்களைத் தந்தார் வாலி. எம்.ஜி.ஆரின் காதல் ரசம் சொட்டும் பாடல்களில் எது கவியரசர் கண்ணதாசன் எழுதியது, எது வாலி எழுதியது என்று பிரித்தறிய முடியாத அளவுக்கு இருக்கும்.

4) கண்போன போக்கிலே கால் போகலாமா.. கால் போன போக்கிலே மனம் போகலாமா என்ற பாடலை எம்.ஜி.ஆருக்காக பணம் படைத்தவன் படத்தில் படைத்தவர் வாலிதான். அதில் வரும் வரிகள்.. இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்.. - இந்த வரிகளை மெய்ப்பிக்கவே எம்.ஜி.ஆர். வாழ்ந்தது போல அமைந்தது அவர் வாழ்க்கை. கவிஞரின் வாக்கு சாதாரணமானதா என்ன!

5) கண்ணதாசன் பாணியைப் பின்பற்றி எழுதுகிறீர்கள் என கூறுகிறார்களே என்று ஒரு முறை கேட்டதற்கு, இருக்கட்டுமேய்யா.. தங்கத்தோடுதானே ஒப்பிட்டுப் பேசுகிறார்கள், தகரத்தோடு இல்லையே, என்று அதையும் கவிதையாக்கியவர் வாலி. பின்னாளில், ஆமாம் நான் என்னையும் அறியாமலேயே கண்ணதாசனின் பாணியில் எழுத ஆரம் பித்துவிட்டேன். காரணம், அவரையே நான் அதிகம் படித்ததால் என்றார்.

6) எம்.ஜி.ஆர் படங்களுக்கு இணையாக சிவாஜி கணேசன் படங்களுக்கும் கவிஞர் வாலி பாடல் எழுதியிருக்கிறார் என்பது பலருக்கும் தெரியாதது. எண்ணிக்கைக் கணக்கு பார்த்தால், நான் சிவாஜிக்கு அதிக படங்களில் எழுதியிருக்கேன். எம்.ஜி.ஆர் எழுபதுகளில் நடிப்பை நிறுத்திவிட்டதால் இந்தக் கணக்கு, என்றார் ஒரு முறை.

7) பாடல் கணக்கு என்று பார்த்தால் ரஜினிக்கு அதிக பாடல்கள் எழுதியவர் கவிஞர் வாலிதான். ரஜினியின் சுறுசுறுப்பு, அவரது ஸ்டைல், தாராள குணத்தை வாலியைப் போல கச்சிதமாக பாடல்களில் கொண்டு வந்த கவிஞர் யாருமில்லை. சிவாஜியில் ரஜினிக்காக வாலி எழுதிய அதிரடிக்காரன்... பாட்டு பட்டையைக் கிளப்பியது. அதில் ரஜினியின் படங்கள் பெயரைக் கொண்டே சரணங்களை அமைத்திருப்பார் வாலி.

8) கமலுக்கும் வாலிக்கும் அத்தனை ஆழ்ந்த அன்பு, நட்பு உண்டு. அந்த நட்பில்தான் கமலின் சத்யா படத்தில் நடித்தார் வாலி. பின்னர் ஹேராம் படத்திலும் முக்கிய வேடத்தில் நடித்தார் வாலி. அபூர்வ சகோதரர்கள் படத்தில் ஒரு காதல் தோல்விப் பாடலை எழுத வாலியை அழைத்தார் கமல். வாலி முதலில் எழுதியது பிடிக்காமல், வேறு எழுதித்தரச் சொன்னாராம். நான்கைந்து முறை இப்படி ஆனதும், வாலி கோபத்துடன் ஒரு தாளை கமலிடம் கொடுத்து, இதுக்குமேல உணர்ச்சிப் பூர்வமா எழுத முடியாதுய்யா, என்றாராம். அந்தப் பாடல்தான் உன்ன நினைச்சேன், பாட்டுப் படிச்சேன் தங்கமே... பாடல்!

9)எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தியுடன் அதிகப் படங்களில் பணியாற்றியவர் வாலி. ஆனால் இளையராஜா வந்த பிறகு, அவருக்கு அதிக பாடல் எழுதியவர் என்ற பெருமையும் வாலிக்கு உண்டு. இளையராஜா - வாலியின் கூட்டணியில் வந்த பாடல்களில் பல இறவா வரம் பெற்றவை. மௌன ராகம், அஞ்சலி, வைதேகி காத்திருந்தாள், தளபதி, மன்னன்... அப்பப்பா... ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல! ஒரு வார்த்தையை மெட்டின் எந்த இடத்தில் வைத்தால் அர்த்தமும் இனிமையும் வெளிப்படும் எனத் தெரிந்தவர் அண்ணன் வாலி என்பார் இளையராஜா.

10) கவிஞர் வாலிக்கு நிகராக இன்னொரு கவிஞரை திரையுலகில் இதுவரை பார்த்ததும் இல்லை, இனி பார்க்கப் போவதும் இல்லை. அப்படி ஒரு மகத்தான ஆற்றல் படைத்த கவிராகத் திகழ்ந்தார் வாலி. அவர் மரணம் பேரிழப்பு என்பது வெறும் வார்த்தையல்ல... சத்தியமான உண்மை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன்

# கவனம் கள்ள நோட்டு




## எரிபொருள் நிலையத்தில் பயிர் மேய்ந்த வேலிகள்

**யா**ழ். நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம். பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அந்த குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மூன்று இளைஞர்கள் இரு மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். வந்தவர்கள் யாழ். நகரில் உள்ள அரச வங்கியொன்றில் பணிபுரிபவர்கள் என்பதை அவர்கள் அணிந்திருந்த சீருடை காட்டிக் கொடுத்தது. அண்ணை ஐநூறு ரூபாவிற்கு பெற்றோல் அடியுங்கோ என்று மூடியை திறந்தபடி கோரினார் அந்த வங்கி ஊழியர். நிரப்பி முடிந்தவுடன் மோட்டார் சைக்கிளை இயங்கு நிலைக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு இயங்கு நிலையில் மோட்டார் சைக்கிளை வைத்திருந்தபடியே ஐநூறு ரூபா தாளை எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரிடம் நீட்டினார். பணத்தைப் பெற்றுக் கொண்ட அந்த ஊழியருக்கு பணம் மேலே சற்று சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. காசு கொஞ்சம் வித்தியாசமாக கிடக்குது வேறை ஏதாவது தாள் காசு இருக்கோ என்று தன்மையாக சந்தேகத்துடன் வினவினார் அந்த ஊழியர். ஏன் என்ன பிரச்சினை இந்தக் காசுக்கு அப்போ நாங்கள் கொடுத்த காசு கள்ளநோட்டு என்று சொல்ல வாறீயளோ. நாங்கள் அப்படிப்பட்ட ஆட்கள் இல்லை என குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுப்பதைப் போல் வார்த்தைகளை அள்ளிவீச தொடங்கினான் அந்த வங்கி ஊழியரில் ஒருவன். ஆனால் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரோ சற்றுத்தன்மையாக இல்லையண்ணை காசு கொஞ்சம் மாறுபாடாக் கிடக்குது. இதற்கு முன்னரும் இங்கை வந்த சிலர் கள்ளநோட்டுக்களை குடுத்து பெற்றோல் அடிச்சுப் போட்டு போனவை. நாங்கள் அவசரத்திலை பார்க்காம வாங்கி வைச்சிட்டம். பிறகு பாங்கில காசு மாத்தும் போது தான் அவை கள்ள நோட்டு என்று தெரிய வந்தது. அதுக்கு பிறகு காசு விடயத்தில எல்லாரிடமும் கொஞ்சம் உசாரா நிற்கிறம். வேறை ஒண்டுமில்ல எண்டு பதிலளிக்கிறார். அந்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர். சில நிமிடங்கள் இரு தரப்புக்குமிடையில் கள்ளநோட்டுத் தொடர்பில் காரசாரமான வாக்குவாதம் முற்றத்தொடங்கியது. நிலமை கைமீறி செல்வதை அறிந்தவர்கள் உடனடியாக பொலிஸாருக்கு தகவலை வழங்கினர். சில நிமிடங்களில் அப்பகுதியினை அடைந்தனர் பொலிஸார். குறித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்களை பெற்றுக்கொண்ட பொலிஸாருக்கு அங்கு அதிர்ச்சியே காத்திருந்தது. குறித்த பணம் கள்ளநோட்டு என்பதை இலகுவாகவே உய்த்தறிந்தனர். அதுவும் வங்கி ஊழியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது அதிர்ச்சியை அதிகமாக்கியது. அந்த இளைஞர்களும் கள்ளநோட்டுக்களை கையாண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது. இப்போது மூவரும் ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்லவே நீதிமன்றம் அனுமதி வழங்கி யாழ். நகரில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் மக்களிடையே பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

## எப்படி நம்புவார்கள் மக்கள்?

**மே**லே சொல்லப்பட்ட சம்பவத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஏமாற்றுப் பேர்வழிகளிடமிருந்தும் மோசடிக்காரர்களிடம் இருந்தும் மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலிருக்கும் அரச வங்கியொன்றின் ஊழியர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். ஆனால் குறித்த பணம் வங்கியிலிருந்து எடுத்து வரப்படவில்லை என தம் மீதான குற்றச்சாட்டை மறுதலிக்கும் குறித்த வங்கி தனது ஊழியர்களுக்கு எவ்வாறு இந்த கள்ளநோட்டு கிடைத்தது என்பது இன்னமும் மர்மமாக இருக்கிறது.

வழமையாக வங்கிகளில் மோசடிப் பேர் வழிகள் சிலர் கள்ளநோட்டுகளை மாற்றச் செல்லும் போது, அவர்கள் வங்கி ஊழியர்களால் கையும், மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவங்கள் அரங்கேறியிருந்தன. ஆனால் இம்முறை அதற்கு மாறாக வங்கி ஊழியர்களே சந்தேக நபர்களாக பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இச்சம்பவம் தொடர்பிலான செய்திகள் ஊடகங்கள் மூலமாக மக்களிடம் செல்லும் போது வங்கி ஊழியர்கள் மீதான நம்பிக்கை தகர்ந்து எல்லா வங்கிப் பணியாளர்களும் மோசடிக்காரர்களோ என்ற தவறான கண்ணோட்டத்தை உருவாக்கிவிடும்.

குறித்த வங்கி ஊழியர்கள் தாம் கொண்டு சென்றது கள்ள நோட்டு என்பதை அறிந்திருக்கவில்லை என்று கூறுவதை எவ்வளவு தூரம் நம்பமுடியும்? ஏனெனில், வங்கிப் பணியாளர்களுக்கு கள்ள நோட்டை இனங்காண்பது தொடர்பில் போதிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே கள்ள நோட்டைக் கண்டுபிடிப்பதில் நிபுணத்துவம் பெற்ற வங்கியாளர்கள் கள்ளநோட்டு என்று அறியாமல் கொண்டு சென்றார்கள் என்பதையும், அது சந்தேகத்துக்குரிய பணத்தாள் என்று எரிபொருள் நிலைய ஊழியர்கள் சொன்ன பின்னரும் "இல்லை அது நல்ல பணம் தான்" என்று வீம்புக்கு நின்றதையும் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.

சாதாரண எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்களால் இனங்காண முடிந்த கள்ளநோட்டை வங்கிப் பணியாளர்களால் இனங்காண முடியவில்லை எனக் கூறுவது எந்த வகையில் ஏற்புடையது?

இதே கள்ளநோட்டை சாதாரண ஒரு பொதுமகன் அது கள்ள நோட்டுத் தான் என்று தெரியாமல் வங்கியொன்றுக்கு கொண்டு சென்றிருந்தால் அவன் தலைவிதி தலைகீழாக மாறியிருக்கும். அவன் மீது மோசடிக் குற்றம் சுமத்தி அவனை ஒரு கை பார்க்காமல் வங்கி ஊழியர்கள் தூங்கியிருக்க மாட்டார்கள். ஆனால் இப்போது சம்பவத்தில் வங்கி ஊழியர்களே மாட்டுப்பட்டதால் அதில் இருந்து எப்படித் தப்பிப்பது என்று தெரியாமல் முழிக்கிறார்கள்.

உண்மையில் குறித்த ஊழியர்கள் கள்ளநோட்டு என தெரிந்து கொண்டே அதை மாற்றி மோசடியில் ஈடுபட முயன்றிருந்தால் அது மிகவும் பாரதூரமானது. ஏனெனில் அந்த முயற்சி எல்லா வங்கிகள் மீதும் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைகளை தகர்த்துவிடும். எனவே இன்று வங்கி ஊழியர்களே மோசடி முயற்சிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிக்கும் போது சாதாரண பொதுமக்களுக்கு கள்ள நோட்டுத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தப் போவது யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

வேலியே பயிரை மேய்ந்தால் எப்படித் தோட்டத்தைக் காக்க முடியும். கள்ளநோட்டு என்பது தனியே யாழ்ப்பாணத்திற்கு மாத்திரம் பொருத்தமானதல்ல. இத்தகைய மோசடி வேலையில் ஒரு பெரிய கும்பலே பின்னணியில் இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும். அவர்களை வலை போட்டுப் பிடிப்பது பொலிஸாரின் கடமை. வங்கிக்கு யாரேனும் கொண்டு வந்த கள்ளநோட்டை கண்டு பிடித்து, அதனை அழிக்காமல் பதுக்கி வைத்திருந்துவிட்டு சமயம் வாய்க்கும் போதெல்லாம் குறித்த வங்கி ஊழியர்கள் வர்த்தகர்களின் தலையில் மிளகாய் அரைத்திருக்கிறார்கள் என்று ஒரு கதை எழுந்துள்ளது. ஆயினும் அது எந்தளவு தூரத்திற்கு உண்மையென்பது தெரியவில்லை. விசாரணைகளும் காலமுமே உண்மையை மக்களுக்குச் சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகல்யாவுக்கு ஒரு துன்பம் என்றால் ஆறுதலாக முகம் புதைத்து அழுவதற்கு, தாலி கட்டிய அவளது ஆசைக் கணவன் அருகில் இல்லை.

சிறுகதை



# சிறகொடிந்த பறவை

நா.பாலகுமாரன்

கண்களில் நிரம்பிய கண்ணீரைத் தாங்க முடியாமல் கண்களை ஒரு தரம் இறுக மூடித் திறந்தாள் அகல்யா. ஊரும் உறங்கி விட்டது. அவளுக்கென இருந்த ஒரே ஒரு உறவான அவளது மழலையும் உறங்கிவிட்டது. ஆனால் அகல்யா வின் கண்கள்மட்டும் உறங்க மறுத் தன. கண்களைத் துடைத்துக் கொண்டே கட்டிலில் சாய்ந்த படி தொலை விலிருந்த தொலைபேசியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். தொலைபேசியில் எந்த விதமான உயிர்ப்பு மில்லை. ஏதோ நினைவு வந்தவளாய் கட்டிலை விட்டு எழுந்து தனது திருமண 'அல்பத்தை' எடுத்துப் பார்த்தாள். 'அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அவளது கைத்தலம் பற்றிய அந்தத் தினத்தை கணவன் மறந்து விட்டான்' என்பதே அவளது கோபம். அந்தக் கோபத்தில் 'வெளிநாடு போனால் சிலருக்கு உறவுகள் மறந்து போகும் என்பது உண்மைதான். அதற்காக கட்டிய மனைவியும் கல் யாண நாளும் கூடவா மறந்து போகும்'என தன்னையும் அறியாமலேயே கூறினாள்.

அகல்யாவும் அவளது கணவ னான சங்கரும் கல்யாண கோலத்தில் இணைந்து இன்றோடு ஐந்து வருடங்கள். திருமணம் முடிந்து இரண்டு மாதங்களிலேயே சங்கர் வெளிநாடு சென்றுவிட்டான். அந்த இரண்டுமாத 'தாம்பத்ய உறவின்' அடையாளச்சின்னம் தான் அவளது குழந்தை தேவகி. அகல்யாவுக்கு ஒரு துன்பம் என்றால் ஆறுதலாக முகம் புதைத்து அழுவதற்கு, தாலி கட்டிய அவளது ஆசைக்கணவன் அருகில் இல்லை. ஏதாவது விழாக் கள், வைபவங்களுக்கு ஜோடியாக செல்வதற்கு ஒரு வாய்ப்பு இல்லை. அவளும் சாதாரண பெண்தானே. அவளுக்கும் திருமணத்திற்கு முன்னர் விதவிதமான கனவுகள் இருந்திருக்கும்தானே. திருமணம்என்பது ஆணின் தேவைக்காக பெண்ணையும் பெண்ணின் தேவைக் காகஆணையும் சேர்த்து வைக்கும் ஒரு வைபவம். அப்படியின்றி பெண்ணும் ஆணும் பிரிந்திருந்தால் அந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் இருக்கிறது? பணம் வாழ்க்கைக்கு தேவையே தவிர வாழ்க் கையை இழந்துதான் பணம் சம்பாதிக்க வேண்டு மென்றில்லை.

எண்ணச் சிறகில் வட்டமிட்ட படியிருந்த அகல்யா அப்படியே அந்த 'அல் பத்தினுள்ளேயே' முகம் புதைத்து உறங்கிப் போனாள். விடிந்தது கூட தெரியாமல் உறங்கிப் போன வளுக் கு குழந்தையின் அழுகைதான் அலார மாக இருந்தது. குழந்தையை சமாதானப் படுத்தி விட்டு குளித்து முடித்த பின்னர் சூடாக இரண்டு தேநீரை தயாரித்துக் கொண்டிருந் தவளை அழைப்பு மணி அழைத்தது. 'யாராக இருக்கும்' என்ற படி அகல்யா வாசல் கதவை திறந்தாள். வாசலில் சங்கரின்நெருங்கிய நண்பன் நந்த குமார் நின்று கொண்டி ருந்தான். அவனை உள்ளே வரும்படி அழைத்த வள் தேநீரை கொடுத்து விட்டு அவனுக்கு எதிரே இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

வாங்கிய தேநீரை சிறிது அருந்தி விட்டு நந்தகுமாரே பேச்சைத் தொடங்கினான். 'மன்னிக்கணும் அகல்யா, நேற்றுக் கல்யாண நாளுக்கு வரவில்லை.அது தான் இன்று வந்தி ட்டு போகலாம் என்று வந்தேன்' என்றா ன்.

அவன் கூறியதைக் கேட்டதும் அகல்யாவின் உதட்டில் ஏளனச் சிரிப்பு உருண்டோடியது. 'கட்டிய கணவனுக்கு தனது கல்யாண நாள் நினைவில்லை. அவனுடைய நண்பனுக்கு நினைவிருக்கிறது. என்ன வேடிக்கை இது?' என நினைத்துக் கொண்டாள். அவளை அறியாமலே அவளது கண்களில் நீர் நிரம்பியது. அழுகையை அடக்குவதற்கு அவள் எவ்வளவோ முயன்றும் நந்தகுமாரின் அடுத்த வார்த்தைகள் அவளை விடுவதாக இல்லை.

'ஏன் அகல்யா...? நிச்சயமாக நேற்று சங்கர் தொலைபேசியில கதைச்சிருப் பான்தானே என்னை ஏதாச்சும் விசாரிச் சவனோ?' என்றான் நந்தகுமார்.

நந்தகுமாரின் அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அகல்யா 'தேம்பித் தேம்பி' அழ ஆரம்பித்துவிட்டாள். நந்தகுமாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'நான் ஏதாச்சும் தப்பாகக் கதைத்து விட்டே னோ?' என தன்னைத்தானே வின வியவன் அதையே அகல்யாவிடமும் கேட்டான். 'அகல்யா நான் ஏதாச்சும் தப்பா கதைச்சா மன்னிச்சிடுங்கோ' என்றா ன். தொடர்ந்து 'ஏன் அகல்யா... உங்களுக் குள் ஏதாவது பிரச்சி னையா?' என்றான்.

நெஞ்சிலுள்ள வேதனைகளை கொட்டித் தீர்த்துவிடவேண்டும் என்று அகல்யா விரும்பினாள். தனது கண்களைத் துடைத்துக் கொண்டே ' ஆமாம் பிரச்சினைதான் நந்து' என்றவள் தொடர்ந்து கூறத் தொடங்கினாள்.

'நந்து உங்களுக்கே தெரியும்! எனக்கு திருமணம் முடிந்து ஐந்து வருடமாச்சுது. அம்மா இல்லாத எனக்கு எல்லாவகையிலும் நல்ல உறவாக இருப்பார் என்று எங்க அப்பா இவரைக் கட்டிவைச்சாங்க. என்ன பிரயோசனம்? எனக்கு தாம்பத்திய உறவு வேண்டாம். என்னோட 'பார்க், பீச், சினிமா' என சுத்த வேண்டாம். கண்ணே, மணியே, செல்லமே என கொஞ்சிக்கொஞ்சி பேச வேண்டாம். நாலு வார்த்தைகளை எப்படி இருக்காய் அகல்யா? நல்லாய் இருக்காயா? குழந்தை தூங்கிட்டாளான்னு' கூடவா கேட்கமுடியாது? இப்ப 2,3 வருடமாக சரியா கதைக்கிறதே இல்லை. காசு அனுப்பினா மட்டும் எடுத்துச் சொல் லுவார். மேலே தொடர்ந்து கதைக்க மாட் டார். 'நேரமாச்சு வேலைக்குப் போக வேணும்' என்று வைச்சிடுவார். அவர் எதையோ என் கிட்ட மறைக்கிறார். இப்படி தனியாக வாழ்ந்தால் ஊருக்குள்ளே எப்படி யெல்லாம் கதைப்பாங்கன்னு அவருக்கு தெரியா தா?

நந்தகுமாரின் மனம் மௌனமாகிவிட்டது. 'அணைக்க இரண்டு கரங்கள் இல்லை. உறங்க விரிந்த மார்பு இல்லை. பறக்க ஒரு ஜோடி இல்லை. பாவம் அகல்யா பட்டமரம் போலானாள்.' என சிந்தித்துக் கொண்டிருந்தவளை தொலைபேசியின் சினுங்கல் தடுத்தது.

தொலைபேசி தொடர்ந்து சினுங்கி ய படியே இருந்தது. அகல்யா சென்று அதை எடுப்பது போல தெரியவில்லை. ஈரமற்ற வெற்று விழிகள் எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. நந்தகுமாரோ தொலைபேசியை ஏற்றுக் கொண்டான்.

'ஹலோ! யார் பேசுறது....? என்றான் நந்தகுமார். மறு முனையிலிருந்து' 'ஹலோ! நான் சங்கர் கதைக்கிறேன். நீங்க யார் கதைக்கிறீங்க....?' என்றது.

'டேய் சங்கர். நான் நந்துடா....' என்றான் நந்தகுமார். அந்த சம்பாசணையை கேட்டுக் கொண்டி ருந்த அகல்யா ஓடிவந்து நந்த குமார் அருகே நின்று கொண்டு தனது காதுகளை மூடிக்கொண்டவள் தொடர்ந் து நந்த குமாரை பேசச்சொல்லி சைகை காட்டினாள். நந்தகுமாரும் பேச்சை தொடர்ந்தான்.

'டேய் சங்கர் நீ எப்படா நம்ம நாட்டிற்கு வருவாய்? நாங்க ளெல்லாம் உன்னை பார்க்கிறதுக்கு எவ்வளவு ஆசையாய் இருக்கிறம் தெரியுமா? நீ .எப்படா வருவாய்' என்றான்.

'இல்லையடா நந்து நான் உங்கு இனிமேல் எப்பவுமே வரமாட்டேன் வரவும் முடியாதுடா' என்றான் சங்கர். எதுவுமே புரியாத நந்தகுமார் அகல் யாவை பார்க்கவும் அவளது தவிப்பை பார்த்த நந்தகுமாருக்கு மனசு கஸ்ரமாக இருந் தது. தொடர்ந்து நந்தகுமாரே பேசினான்.

'டேய் சங்கர்.....' என்டா நீ வரமாட் டேங்கிறாய்? உனக்கு என்ன நடந்தது? ஏன் இப்படியெல்லாம் பேசுறாய்? என்றான். நந்தகுமார். சிறிது நேரம் சங்கரிடம் இருந்து எந்தவித பதிலு மில்லை. பின்னர் சங்கர் பேசத் தொடங்கினான்.

'நந்து! நான் பாவியடா...' நான் ஒரு துரோகியடா.... நான் வெளிநாடு வந்து மூன்று வருடமாக அகல்யா நினைப்பிலேயே இருந்தேன். ஆனால் .... இந்த நாட்டினுடைய கலாசாரம், சூழல், இளமை உணர்வுகளும் சேர்ந்து .... என்னை தோற்கடித்து விட்டன. என் உணர்வுகளை ஒரு அளவிற்கு மேல் அடக்கமுடியலைடா... என்னை மன்னிச்சிடு நந்து. நான் இங்கு வேற ஒருத்தியை கல்யாணம் பண்ணிக்கிட்டேன்ரா... என் அகல்யாவை நான் ஏமாத்திட்டேன்டா.... என்றான்.

சங்கர்... நீஇவ்வளவு கேவலமானவனா? என்றான் நந்தகுமார்.'அப்படியில்லை நந்து... என் அகல்யாகிட்ட எனக்கு நிறைய அன்பிருக்கு. ஆனால் என் இளமையை...' என தொடர்ந்தவனை 'போதும்சங்கர் நிறுத்து...' என்ற நந்தகுமார் தொலை பேசியை 'பட்' என வைத்து விட்டு ஒரு பெருமூச்சு விட்டபடியே அகல்யா வை நோக்கி திரும்பினான். அங்கே அகல்யாநின்றகோலம் குழந்தையை இடுப்பிலே சுமந்தபடி என்ன செய்வதென்று தெரியாமல் அச்சமுற்று வறண்டு போன விழிகள் தன்னை யே இரந்து நோக்குவதை நந்தகுமார் உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நடுவானில் கைவிட்ட பரசூட்

• தமிழில்: ஜெகன்




உண்மைச் சம்பவம்

**“ பயிற்சியாளர் ஜோன் பீட்டர் விமானம் பறப்பதில் அனுபவம் வாய்ந்த ஒருவர். கடந்த காலங்களில் ஏறத்தாழ 1500 பேருக்குப் பயிற்சியளித்து நடுவானிலிருந்து குதிக்க வைப்பித்த அனுபவம் அவருக்குண்டு.**

மேலை நாடுகளில் விதம் விதமான ஆபத்தான ஆனால் சுவாரஷ்யமான விளையாட்டுக்களில் இளைஞர்கள் ஈடுபடுவதுண்டு. இதற்கு அந்த நாடுகளின் சட்டங்கள் இடம் கொடுக்கும் என்பது மட்டுமல்ல பெற்றோர்களில் தங்கள் பிள்ளைகளை அவ்வாறான விளையாட்டுக்களில் ஈடுபட ஊக்குவிப்பார்கள். இப்படியான ஒரு பொழுது போக்கு விளையாட்டுத்தான் பரசூட் மூலம் கீழே குதிப்பதாகும்.

ஒரு பயிற்சியாளருடன் மேலெழும்பும் ஒரு சிறியரக விமானத்தில் ஏழெட்டு இளைஞர்கள் பரசூட்களுடன் தயாராக இருப்பார்கள். ஒரு குறிப்பிட்ட உயரத்தில் விமானம் பறக்கையில் பயிற்சியாளரின் நெறிப்படுத்தல்களின் கீழ் ஒவ்வொருவராக வானத்திலிருந்து குதிப்பார்கள். இதற்காக மிகப் பெரிய தொகை பணத்தை பயிற்சியாளருக்கான கூலியாகவும் கொடுக்க அவர்கள் தயாராக இருப்பர்.

ஒரு நாள் நேரம் பிற்பகல் இரண்டு மணி. ஏழு இளைஞர்களுடனும் விமானி மற்றும் பயிற்சியாளருடனும் அந்தச் சிறிய ரக விமானம் ஒரு சிறிய வட்டம் அடித்த பின்னர் 'வீர்' என்று வானில் எழும்பியது.

2000 அடி உயரத்திலிருந்து பரசூட் குதிப்பதற்கான மூன்று மணி நேரப் பயிற்சிக்காகவும் கடைசியில் விமானத்திலிருந்து கீழே குதிப்பதற்கான கட்டணமுமாக ஆளுக்கு 90 டொலர்கள் வீதம் அவ் இளைஞர்கள் செலுத்தியிருந்தனர்.

பயிற்சியாளர் ஜோன் பீட்டர் விமானம் பறப்பதில் அனுபவம் வாய்ந்த ஒருவர் கடந்த காலங்களில் ஏறத்தாழ 1500 பேருக்குப் பயிற்சி யளித்து நடுவானிலிருந்து குதிக்க வைப்பித்த அனுபவம் அவருக் குண்டு அன்று காலையில் கூட சுமார் பத்து இளைஞர்கள் பரசூட் மூலம் குதித்துப் புளகாங்கிதம் அடைந் திருந்தனர்.

“ஓ! அது ஒரு வித்தியாசமான அனுபவம் கீழே குதிக்கும் போது ஏற்படும் ஒரு புதுவித உணர்வு காற்றுடன் உராயும் போது ஏற்படும் சுகம் எல்லாமே தனி அலாதி தான் பறப்புகளில் ஈடுபட்டவர்களில் ஒருத்தர்.

பயிற்சியாளர் ஜோன் பீட்டர் இவ்விதம் விபரிப்பார். “பனிக்கட்டிச் சறுக்கலை விட இது எளிது நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் “குதி” என்று நான் கூறும் போது நான் விளக்கிக் கூறிய முறையில் குதிப்பது தான். தரையில் விழும் போது உடலை விறைப்பாக்காமல் மடங்கி அப்படியேபடுப்பது போல் விழ வேண்டும் அப்படிச் செய்தால் ஒன்றுமே கேரிடாது” ஏற்கனவே அந்த வருடத்தில் ஒரே ஒருவன் மட்டும் விழும் போது உடலை இலேசாக்கி மடங்கிப்படுக்காமல் நேராகத் தரையில் காலை ஊன்றிய தால் அவனது வலது காலில் ஒரு சிறு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.

குதிப்பதற்குத் தயாராக இருந்த எழுவரில் ஐவர் ஒரு பக்கமாக விமானத்திற்குள் போடப்பட்டிருந்த வாங்கில் உட்காந்திருந்தார்கள்.

இருவர் மட்டும் கதவைப் பார்த்தபடி தரையில் குந்தியிருந் தார்கள். அதில் ஒருவர் சார்ள்ஸ் அவன் இரும்பு அலுமாரிகள் உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனத் தில் பயிற்சியாளனாக இருந்தான். விமானத்திலிருந்து பரசூட் மூலம் குதிப்பதற்கான பணத்தை அவனது இரு சகோதரிகள் அவனது இருபதாவது பிறந்த நாளுக்கான தமது பரிசாக அவனுக்கு வழங்கியிருந்தார்கள்.

விமானம் உயர் எழும்பிய போது எல்லோரும் மௌனமாக இருந்தார்கள். இரண்டொருவர் மட்டும் பயிற்சியாளர் ஜோனிடம் “நாங்கள் குதிக்கும் போது பரசூட் விரிந்து கொள்ளாமல் நாங்கள் தரையில் விழுந்தால் கொடுத்த காசைத் திருப்பித் தருவீர்களா?” என்று கேட்டார்கள் பயிற்சியாளர் ஜோன் இந்த ஜோக்கை அடிக்கடி கேட்டிருக்கிறார். ஆனால் ஒரு மெல்லிய புன்முறுவல் மட்டுமே அவர் முகத்தில் தெரந்தது.

விமானத்தின் பறப்பு உயரம் காட்டும் கருவி 2000 அடியைத் தொட்டது. ஜோன் மெதுவாகப் போய் விமானத்தின் பக்கக் கதவைத் திறந்தார். 'சர்' என்று குளிர் காற்று உள்ளே பீறிட்டு விமானத்தை நிறைத்தது.

முதலாவது இளைஞன் குதிக்கத் தயாரானான். அவனுடைய பரசூட்டை விரிக்கும் கருவி விமானத்திலிருந்து அவன் குதித்தவுடன் இணைக்கப்பட்டிருந்தது. அவன் குதித்தவுடன் பரசூட்டை விரிக்கும் கருவி தானாக இயங்கி அதை விரியச் செய்யும். பின்னர் பரசூட்டுடனான இணைப்பைத் துண்டித்துக் கொள்ளும். ஆனால், குதித்தவர் விமானத்தில் மோதாமல் இருப்பதற்காக அவர் சற்றுக் கீழே பாதுகாப்பான வான் வெளிக்கு வந்த பின்னரே பரசூட் விரிந்து கொள்ளும் வகையில் அதன் தொழில் நுட்பம் அமைந்திருந்தது.

முதலாவது இளைஞன் பரசூட்டை இணைத்துக் கொண்டு வாசலில் காத்திருந்தான்.

[தொடரும்...]

## என்னை யாராவது தத்தெடுங்கள்



காதல் கொண்டேன், ஆயிரத்தில் ஒருவன் உட்பட்ட படங்களை இயக்கியவர் செல்வராகவன். நடிகர் தனுஷின் சகோதரர். இவர் தற்போது ஆர்யாவின் நடிப்பில் இரண்டாம் உலகம் என் படத்தை இயக்கி வருகிறார்.

இவர் சமீபத்தில் அளித்த பேட்டியில்,

இரண்டாம் உலகம் படத்தையடுத்து எந்தப் படம் இயக்குவது என்பது பற்றி நான் இன்னமும் முடிவு செய்யவில்லை. ஹிந்தியில் ஒரு படம் இயக்க எண்ணி உள்ளேன். எனினும் அது தாமதமாகிக் கொண்டே இருக்கிறது.தனுஷ், ராணா இருவரில் யாராவது ஒருவர் நடிக்கும் படத்தை இயக்கலாம், அல்லது நான் சினிமாவை விட்டேகூட விலகலாம். ஏனென்றால் எனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் ஒவ்வொரு விடயத்தையும் மெதுவாகச் செய்கிறேன்.பெரும் கடன்சுமை காரணமாகவே சினிமாவில் நான் உழைக்க வேண்டியுள்ளது. யாராவது பணக்காரர் என்னை தத்தெடுத்துக் கொண்டு எனது கடன்களை அடைக்க முன்வந்தால் நிச்சயம் சினிமாவிலிருந்து விலகுவேன். இப்போ தெல்லாம் குடும்பத்தோடு நிறைய நேரம் செலவழிக்க வேண்டி உள்ளது.அப்படியே சினிமாவிலிருந்து விலகும் நிலை வந்தால் குடும்பத்தோடு செட்டிலாகி இன்னும் குழந்தைகள் பெற்றுக்கொள்வேன் - என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கதை



# போனவர்களின் வருகை

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

காலை நான்கு மணிக்கே விழிப்பு வந்துவிட்டது. வாகனங்களின் "சர்சர்" என்ற இரைச்சல் காதைக் குடைத்தது. எங்கள் தெரு பெரும் அமளியாகிவிட்டது. பகலிலும் வாகனங்களின் இரைச்சலுக்குக் குறைவில்லை. இரவிலும் அதே போலத்தான். எல்லா உருப்படிகளும்' புகையைக் கக்கியபடி, புழுதியை வாரித்திட்டிய படி' ஓடி மறைகின்றன.

அதிலும் குறிப்பாக அந்த 'கைஸ்'வான் (எதிர்வீட்டு "சண்முக மாமா ஹைஏஸ் வாகனத்தை 'கைஸ்' என்று தான் அழைப்பார். எனக்கும் அது பிடித்துவிட்டது.)

தெருவில் அவை ஓடி ஒழியும் தந்திரமோ தந்திரம். எனக்கு 'கைஸ்' வாகனத்தைப் பார்த்து பெரு மூச்சு விடத்தான் தெரியும். கொஞ்ச நாளைக்காவது அந்த வாகனம் வீட்டு வாசலில் நின்றால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்.

நானும் வடக்கு, கிழக்கில் வாழுகின்ற ஓர் தமிழ் குடிமகன் தானே? எனக்கும் ஆசாபாசங்கள் இருக்கத்தானே செய்யும். நீங்களே பாருங்கள் இப்போது குடாநாட்டில் எந்த மூலை முடுக்குகளிலும், கிராமங்களிலும் உள்ள வீடுகளில் "கைஸ்" வாகனம் கம்பீரமாக நிற்கும்.

வான் நிற்கும் வீடுகளில் கூட்டத்திற்கோ பஞ்சமிருக்காது.. எல்லாமே நாட்டை விட்டு, ஜேர்மன், சுவீடன், பிரான்ஸ், கனடா, இலண்டன், நோர்வே என புகலிடம் தேடிப் போய் அங்கேயே நிரந்தரமாய் அல்லது தற்காலிகமாய் வாழ்க்கை அமைத்துக் கொண்ட நமது உடன் பிறப்புக்கள்தான்.

அநேகமாக பதினைந்து இருபது வருடங்களுக்கு பின்பு இப்போது தான் தமது வீட்டை, ஊரை, உறவினர்களை, நண்பர்களை, முன்பு 'சாடையாகக்' காதலித்த பெண்களை, பின்னேரத்தில் சேர்த்து "கள்ளடித்த, தம்மடித்த இடங்களை 'பார்வை'யிட வந்துள்ளார்கள், கூடவே தமது குடும்பத்தோடு 'ஒட்டி'உறவாடிய வெளிநாட்டு 'சிவப்புத்தோல்' நண்பர்களையும், நண்பிகளையும் அழைத்து வரத்தவறவில்லை.

பிறகென்ன கூட்டத்துக்குச் செல்லவா வேண்டுமா?

சொந்த வீட்டிலோ அப்பா, அம்மா, அண்ணன், தங்கை, மாமன், மச்சான் என உறவுகளின் கூட்டம். அடுத்து, வெளிநாட்டிலிருந்து வந்தவர்களின் கூட்டம் பின்னர் இவர்களைப் பார்க்க "முண்டியடிக்கும் 'ஊரில் 'நிரந்தரமாக தங்கிவிட்டவர்கள் கூட்டம்.

கூட்டமோ கூட்டம்.

ஆரவாரம், பரபரப்பு, உற்சாகம். எல்லாம் நீ முந்தி நான் முந்தி என்ற நிலை தான் காரணம். வெளியிலிருந்து வந்த நம் உடன் பிறப்புக்களோ நாம் அதிக நாட்கள் நிற்க மாட்டோம். பதினைந்து நாட்களுக்குள் போய் விடுவோம் என அரசியற்கட்சி போல் அறிக்கையை விட்டு விடுவார்கள்.

பாவம் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் கதிகலங்கிப் போவார்கள். "அடக் கடவுளே எம்மை விட்டு பிரிந்தவர்கள் வந்தால் ஒரு மாதத்திற்கு மேலாவது நிற்க வேண்டாமோ ஊரில், மாரி மழை தான் இல்லை "பாசமழையிலாவது நனைய வேண்டாமோ?"

என்ன செய்வது? அவர்களை தடுக்க முடியுமா? மறிக்க முடியுமா? சரி ஏதோ இவ்வளவு நாட்கள் தன்னும் நிற்கின்றார்களே என சந்தோசப்பட வேண்டியது தான்.

கோயில் அபிஷேகங்கள் (இது மகன் வெளிநாடு வெளிக்கிட்டு "இடையில்" தடங்கலாக நின்ற போது இறைவனிடம் வேண்டியது) சுவாமி வீதிவலம் வர "வாகனங்கள்" (இதுவும் பழைய நிலைதான்)

உற்றார், நண்பர்கள் வீட்டில் 'வெளிநாட்டு போத்தல்' களோடு 'முகப்பாத்தி' பின் கோழிக்கறியோடு விருந்தோம்பல், களியாட்டங்கள், அடுத்து கையடக்கமான வீடியோ கமராவினால் வீட்டில் நிற்கும் "கைஸ் " வாகனம் தொடக்கம், ஆட்டடி, மாட்டடி என பனையடி வரை 'படம்' எடுத்தல்' நீளும்.

(அடுத்த வாரமும் வருவார்கள்...)



# இராசி பலன்

24.07.2013 - 30.07.2013



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

வாழ்வில் வாய்மையும், தூய்மையும் பின்பற்றி வளம் பெறுகின்ற, மேஷ இராசிக்காரர்களே!

மனதிற்கு ஏற்புடைய பணிகளை திறம்பட நிறைவேற்றி, மகிழ்ச்சி பெறுவீர்கள். அக்கம் பக்கத்தவரிடம் 'நல் அன்பு வளரும். முருகப்பெருமானின் நல்லருள் பலத்தால், குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். பூர்வசொத்தில் திருப்திகர வருமானம் கிடைக்கும். எதிரியிடம் விலகுவதால் சிரமம் தவிர்க்கலாம். மாணவர்கள், உடல் நலத்தில் தகுந்த அக்கறை கொள்வது அவசியம்.



**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

இலட்சியம் நிறைவேற சூழ்நிலை அனுசரித்து செயல்படும், ரிஷப இராசிக்காரர்களே!

நல்லோரின் அறிமுகம் கிடைத்து, மனதில் புதிய நம்பிக்கை கொள்வீர்கள். சுப நிகழ்வுகளுக்கு தாராள பணச் செலவு செய்வீர்கள். வீடு, வாகனத்தில் பயன்பாட்டு வசதி திருப்திகரமாக கிடைக்கும். உங்களின் ஆறுதல் வார்த்தை நல்வழி நடத்தும். மாணவர்கள், பொது அறிவில் சிறந்து சகமாணவர்களிடம் பாராட்டு பெறுவர்.



**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

நம்பிக்கையுடன் பணிபுரிந்து அதிக நன்மை பெறும், மிதுன இராசிக்காரர்களே!

இனிய வார்த்தை பேசி, உங்கள் மீதான நன்மதிப்பை பாதுகாத்துக் கொள்வீர்கள். உடன் பிறந்தவர்களின் பணத்தேவைக்கு இயன்ற அளவு உதவுவீர்கள். புத்திரர் படிப்பில் சிறந்து வர ஊக்கமும், தகுந்த பயிற்சியும் தருவீர்கள். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால் மட்டுமே, படிப்பில் கவனம் வளரும்.



**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

கருணை நிறைந்த மனதுடன் பிறருக்கு உதவுகின்ற, கடக இராசிக்காரர்களே!

உடன்பிறந்தவரின் மனக்கஷ்டம் நீங்க ஆறுதல் சொல்வீர்கள். வீடு, வாகன பாதுகாப்பில், உரிய கவனம் வேண்டும். புத்திரரின் உடல்நலம் ஆரோக்கியம் பெற, மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.மாணவர்கள், கூடுதல் பயிற்சியால் திட்டமிட்ட தேர்ச்சி விகிதம் பெறலாம்.



**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

இன்ப, துன்பத்தை மனப்பக்குவத்துடன் சமமாக கருதுகின்ற, சிம்ம இராசிக்காரர்களே!

நவக்கிரகங்களில், பெரும்பான்மை அனுசரணையாக அமைந்து, வாழ்வியல் நடைமுறையில், புதிய வளர்ச்சி மாற்றத்தை தருகின்றனர். புத்திரர் சொல்கிற வார்த்தைகளை வேதத்தின் விளக்கம் போல எண்ணுவீர்கள். குடும்பத்தில் மாணவர்கள், நல்ல தேர்ச்சி அடைந்து பாராட்டு பரிசு பெறுவர்.



**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

தன் தகுதியை உணர்ந்து வாழ்க்கையை நடத்துகின்ற,கன்னி இராசிக்காரர்களே!

திட்டமிட்ட பணிகளை முழு கவனத்துடன் நிறைவேற்றுவதால், நற்பலன் சீராக கிடைக்கும். வீணான வார்த்தை பேசி பொழுதுபோக்குபவரிடம் விலகுவது நல்லது. ஆடம்பர செலவுகளை தவிர்த்து, குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். மாணவர்கள், அதிக பயன்தராத பொருள் வாங்குவதை தவிர்க்கவும்.



**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

காலத்தை பொன் போல மதித்து பணிபுரியும், துலாம் இராசிக்காரர்களே!

பணவரவுக்கு மீறிய அளவில், புதிய செலவினங்கள் உருவாகும். வீடு, வாகனத்தில் நம்பகத் தன்மை குறைவானவர்களுக்கு இடம் தர வேண்டாம். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். இல்லறத்துணையிடம் கருத்து, பேதம் வராத அளவுக்கு, பொறுமை குணம் பின்பற்றுவது நல்லது. மாணவர்கள், சாகச விளையாட்டுகளை தவிர்ப்பது நல்லது.



**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மனசாட்சிக்கு முக்கியத்துவம் தருகின்ற, விருச்சிக இராசிக்காரர்களே!

உங்களின் நற்குணம் செயல்திறன் கண்டு, புதியவர் அன்பு பாராட்டுவர். எதிர்கால வாழ்வில் கூடுதல் நம்பிக்கை வளரும். பணியாளர்கள், தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வதால் பணித்திறன் வளரும். மாணவர்கள், நல்ல தேர்ச்சி பெற்று ஆசிரியர், பெற்றோரிடம் பாராட்டுப் பெறுவர்.



**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

தன்னால் இயன்ற செயல்களை இனிதே மேற்கொள்ளும், தனுசு இராசிக்காரர்களே!

உங்கள் சிந்தனை மற்றும் செயலில் புதிய வளர்ச்சி மாற்றம் உருவாகும். தாமதமான பணிகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றி, கூடுதல் அளவில் நன்மை பெறுவீர்கள். பணியாளர்கள், கூடுதல் வேலை வாய்ப்பு, அதிக சம்பளம் பெறுவர். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ந்து படிப்பில் உயர்ந்த தேர்ச்சி விகிதம் பெறுவர்.



**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

தெய்வ நம்பிக்கையுடன் நாளும் பணிபுரியும், மகர இராசிக்காரர்களே!

எந்த செயலையும் நன்கு பரிசீலனை செய்து நிறைவேற்றுவீர்கள். நண்பர்களின் வாழ்வியல் சூழ்நிலை உணர்ந்து, இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் உற்பத்தி, விற்பனை சீராகும். மாணவர்கள், இலட்சிய மனதுடன் படித்து, நல்ல தேர்ச்சி விகிதம் பெறுவர்.



**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

தன்குறை சரி செய்வதில் தயக்கமின்றி செயல்படும், கும்ப இராசிக்காரர்களே!

மனம், தெளிந்த நீரோடை போல இருக்கும். அன்புக்கு உரியவர்களின் உதவி கிடைத்து, முக்கியமான பணி ஒன்றை நிறைவேற்றுவீர்கள். அதிக பயன் தராத பொருட்கள் வாங்குவதை தவிர்ப்பதால் பணச் செலவு குறையும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறுகளை, தாமதமின்றி சரி செய்வது நல்லது. மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும்.



**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

அதிக உழைப்பினால் வாழ்வில் வளம் பெறுகிற, மீன இராசிக்காரர்களே!

குடும்பச் செலவுகளுக்கு பணவசதி தாராள அளவில் இருக்கும். சுற்றுச் சூழ்நிலை உணர்ந்து பேசுவதால் மட்டுமே, சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாக்க இயலும். இல்லறத்துணை, உங்களின் கருத்துகளை அக்கறையுடன் கேட்டு நடப்பர். தொழிலில் அளவான உற்பத்தி பணவரவு கிடைக்கும். மாணவர்கள், தன்னை புகழ்ந்து பேசுபவரிடம் முன் யோசனையுடன் பழகுவது நல்லது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் உலகம்

இலக்கம் 01இல் இருந்து 16 வரையிலான இலக்கங்களைத் தொடர்பு படுத்தி உருவத்தைக் கண்டு பிடியுங்கள்.




26

# கும்பகர்ணன்






## சிறுவர் மர்மத் தொடர் 11

– அம்புலி

மாயக்கிழவி அவ்வாறு சொன்னதும் ஒரு கணம் காடே சுழல்வது போல நந்திவர்மன் உணர்ந்தான். அவனும், அவனது தளபதியும், படை வீரர்களும் வேட்டையாட ஆரம்பித்த இடத்தில் ஒன்றாய் நின்றனர். நந்திவர்மனைத் தவிர மற்றைய எவருக்கும் இதுவரை நடந்தது ஞாபகத்தில் இருக்கவில்லை. ஏதோ கனவு கண்டு விழித்தவர்கள் போலவே அவர்கள் இருந்தார்கள்.

ஆனால், நந்திவர்மனுக்கு மட்டும் இளவரசர்களை மந்திரக் கிழவி பலி கேட்ட விடயம் திரும்பத் திரும்ப ஞாபகத்துக்கு வந்தது. மனதில் பெரும் துயரைச் சுமந்துகொண்டு, தொடர்ந்து வேட்டையாடுவதை நிறுத்திவிட்டு அரண்மனை திரும்பினான் மன்னன்.

"இது தான் நடந்தது மகாராணி அன்று மந்திரக்கிழவியிடம் நான் உறுதியளித்தபடி என் புதல்வர்களை பலியிட நான் அவளிடம் கொடுக்க வில்லை. அந்த ஆத்திரத்தில் தான் இப்படி சித்துவேலைகள் செய்து இளவரசர்களை கவர்ந்துவிட்டாள்" என முன்னர் நடந்த சம்பவத்தையும், இளவரசர்கள் எதற்காகக் கடத்தப்பட்டார்கள் என்பதையும் சொல்லி முடித் தான் நந்திவர்மன். அவ்வாறு அவன் சொல்லி முடித்தது தான் தாமதம்! அடுத்த நொடியே 'ஓவென்று' பெருங் குரல் எடுத்து அழத்தொடங்கினாள் மகாராணி.

"மகாராணி! பயங்கொள்ள வேண்டாம் எப்படியும் நம் பிள்ளைகளை அந்த இரட்சசியின் பிடியில் இருந்து மீட்டுவிடலாம்" என்று தன் மனைவிக்கு மன்னன் ஆறுதல் கூறத் தொடங்கினான். அதே சமயம் அடர் கானகம் ஒன்றில், கரையெதுங்கி இருந்த இளவரசர்கள் இருவரும் தாம் யாரால் இப்படி மந்திர வல்லமையால் இழுத்து வரப்பட்டோம் என்று அறியாதவர்களாய், கைகளில் உருவிய வாள்களுடன் நடக்கத் தொடங்கினர்.

[மந்திரக் கிழவி வருவாள்...]

## பள்ளிக் கூடம் போகலாமே



பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா - நிறைய
பிள்ளைகளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா - கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
சின்ன பாப்பா - உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சு
சின்ன பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் - அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்ன பாப்பா - ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் போகலாம் வா
சின்ன பாப்பா - நிறைய
பிள்ளைகளோட பழகலாம் வா
சின்ன பாப்பா!

ப. கார்த்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர்யாவும், நயன்தாராவும் 'பாஸ்' என்கிற 'பாஸ்கரன்' படத்தில் ஜோடியாக நடித்தனர். அவர்களின் ஜோடிப்பொருத்தமும் அற்புதமாகவே அந்தப்படத்தில் இருந்தது. நிஜ ஜோடியைப் போலவே இருவரும் அவ்வளவு நெருக்கமாக நடித்தனர். தற்போது இயக்குநர் ஷங்கரிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த அட்லீ இயக்கும் 'ராஜா ராணி' படத்தில் மறுபடியும் இணைந்துள்ளது ஜோடி. இந்தப் படத்தில் முன்பைவிட இருவரும் மிக நெருக்கமாக நடித்துள்ளனர்.

ஏற்கனவே இருவரும் காதலிக்கிறார்கள் என வதந்தி (?) பரவிக் கொண்டிருக்கும் நிலையில், இருவரும் நெருக்கமாக நடித்திருப்பது இந்த வதந்தியை உறுதிப்படுத்தி இருக்கிறது. இது பற்றி நயன்தாராவிடம் கேட்டதற்கு, நெருக்கமாக நடிப்பது என்பது கதையைப் பொறுத்தது. எங்கள் இருவருக்கும் இடையில் நல்ல புரிதல் உள்ளது. அந்தப் புரிதல்தான் படத்திலும் வெளிப்பட்டிருக்கிறது. இதுவரை என்னுடன் நடித்த நடிகர்களிலேயே ஆர்யா தான் எனக்கு மிகவும் பொருத்தமான ஜோடி. அந்தக்கால ரஜினி - ஸ்ரீப்ரியா, கமல் - ஸ்ரீதேவி ஜோடி போல எங்கள் ஜோடியும் பேசப்படும் என்றார். அத்துடன் ஆர்யாவின் அறிவுரைப்படி வயதான நடிகர்களுடன் சேர்ந்து இனி நடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறாராம் நயன்.

## அதிரடிக்கு ஆசை



"தேசிங்கு ராஜா" படத்தின் விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சிக்காக ரீ-சேர்ட், ஜீன்ஸ் சகிதமாக வந்த பிந்து மாதவி, படத்தில் சூரியும் தானும் வரும் அலப்பறைக் காட்சிகளுக்கு எல்லாம் தொடையைத் தட்டி விசில் அடித்து கலாட்டா செய்து சிரித்தார். நிகழ்ச்சி முடிந்து வெளியே வந்த பிந்து மாதவியிடம், "நீங்கள் எப்பவுமே இப்படித்தானா, இல்லே இப்படித் தான் எப்பவுமா?" என்றதற்கு, "நான் அர்ஜுன் ரசிகை. அவரைப் போலவே அதிரடி ப்படங்கள் பண்ணத்தான் ஆசை" என்றார்.

## குழந்தைகளுக்காக உயிரையும் கொடுப்பேன்



எனது குழந்தைகளுக்காக உயிரைக் கூடக் கொடுப்பேன் என்று தெரிவித்துள்ளார் பிரபுதேவா.

தமிழில் மட்டும் வலம் வந்து கொண்டிருந்த பிரபுதேவா, தற்போது ஹிந்தியில் கலக்கிக் கொண்டிருக்கிறார்.

தனது தற்போதைய வாழ்க்கை பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில்.

"நான் எப்பவுமேஅம்மா பிள்ளை. சின்ன வயதில் அவரது சேலையைப் பிடித்துக் கொண்டு அவர் பின்னாலேயே சுற்றுவேன்.

இப்போதும் கூட அம்மாதான் தலைக்கு எண்ணெய் பூசி குளிப்பாட்டி விடுவார், அவ்வளவு பாசம். எனக்காக உயிரையுங் கூடக் கொடுப்பார், அதேபோன்று தான் நானும். என் பிள்ளைகளுக்காக உயிரைக் கூடக் கொடுப்பேன். தற்போது மும்பையில் இருப்பதால் என் மகன்கள் ரிஷி, அதித் அருகில் இல்லாமல் தனிமையாக உணர்கிறேன். விடுமுறை கிடைத்தால் உடனே அவர்கள் மும்பை வந்துவிடுவார்கள். அல்லது எனக்கு ஓய்வு கிடைக்கும் நேரம் நான் சென்று விடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

## சின்னக் கோவைசரளா

நீதானே என் பொன் வசந்தம்' படத்தில் திரையுலகுக்கு அறிமுகமான வித்யு ராமன், இப்போது 'ஜில்லா' படத்தில் நடிக்க இருக்கிறார்.

'இவர்', 'நீதானே என் பொன்வசந்தம்' படத்தில் சமந்தாவின் தோழியாக வந்து சந்தானத்துடன் இணைந்து கலக்கல் நகைச்சுவை புரிந்தவர் வித்யு ராமன். தொடர்ந்து நகைச்சுவைக் கதாபாத்திரங்களை ஏற்று நடித்து வந்த இவர், கடைசியாக 'தீயா வேலை செய்யணும் குமாரு' படத்தில் சந்தானத்தின் காதலியாக நடித்திருந்தார்.

இந்தநிலையில் வித்யு ராமன் தற்போது விஜய் நடிக்கும் 'ஜில்லா' படத்தில்நகைச்சுவைக் கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். அவர், விஜய் மற்றும் மோகன்லாலுடன் இணைந்து நகைச்சுவை செய்யப் போகிறாராம். ஏற்கனவே அஜித்தை வைத்து 'சிறுத்தை' சிவா இயக்கும் புதிய படத்திலும் வித்யு ராமன் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது இவரை எல்லோரும் சின்னக் கோவை சரளா என்று செல்லமாக அழைத்து வருகின்றனர்.



## தனுஷுக்கு ஜோடி அமலாபால்

தனுஷின் அடுத்த படத்தில் அவருக்கு ஜோடியாக அமலா பால் நடிக்கப் போகிறார் என்கிறார்கள் கோடம்பாக்கத்தில் உள்ளவர்கள்.

தந்தி ரி.வி.யில் புதிதாக ஒளிபரப்பாகும் நிகழ்ச்சி ஒன்றில் இருவரும் ஜோடியாகக் கலந்து கொண்டதை அதற்கு உதாரணமாகச் சொல்கிறார்கள்.


வெற்றிமாறன் இயக்கத்தில் வேங்கைசாமி, கே.வி.ஆனந்த் மற்றும் சுராஜ் இயக்கும் படங்கள் என அடுத்தடுத்து மூன்று படங்கள் தனுஷின் கைவசம் உள்ளன.

இந்த மூன்று படங்களிலுமே கதாநாயகி யார் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எனவே, இந்த மூன்று படங்களில் ஏதாவது ஒன்றில் அமலா பால் நாயகியாக நடிக்கலாம் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தி முனிவர் இல்லை



நான் மகாத்மா காந்தியின் ரசிகன். ஆனால், அவரது தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் இருப்பது போன்று சித்தரிப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை என நடிகர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது–

சாதாரண மனிதராக இருந்து தேசத்துக்காக அர்ப்பணிப்பு உணர்வோடு பாடுபட்டார் காந்தி. 'ஹேராம் படத்தை' அதற்காகத் தான் எடுத்தேன். காந்தியை சாமியாராக, முனிவராகப் பார்க்கக் கூடாது. தேசப்பற்று என்ற வார்த்தையை கவனமாகப் பயன்படுத்தாவிட்டால் ஆபத்தாகிவிடும். கிரிக்கெட் மீதான ஈடுபாடு தேசப் பற்றாகி விடாது.

'விஸ்வரூபம்' படத்தின் படப் பிடிப்பு இடங்களுக்காக நிறையச் சிரமப்பட்டோம். ஆனால், 'விஸ்வரூப'த்தின் தொடர்ச்சியாக இரண்டாம் பாகத்தை எடுக்க வில்லை. இருந்தாலும், முந்தைய படத்தின் உணர்வு தெரியும். ஹிந்தியில் படம் பண்ணும் ஆசை இருக்கிறது. தயாரிப்பாளரைத் தேடி வருகிறேன். எனது மகள் ஸ்ருதி முன்னணி நடிகையாக இருப்பது பெருமையாக இருக்கிறது. நேரம் அமைந்தால் இருவரும் சேர்ந்து நடிப்போம் என்றார்.

## கவர்ச்சியில் போட்டி





ராம் சரண் - ஸ்ருதிஹாசன் நடிக்கும் 'எவடு' என்ற தெலுங்குப் படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்கிறார் எமி ஜாக்சன். இந்தப்படத்தில் எமி ஜாக்சனுக்கு ஒரு நீச்சல் காட்சியும் உண்டாம். அதில் அவர் காட்டிய கவர்ச்சியைக் கண்டு அசந்து போன ஸ்ருதி போட்டிக்காக தான் வரும் காட்சிகளிலும் கவர்ச்சி மழையைப் பொழிந்து தள்ளியிருக்கிறாராம். இவர்களின் கவர்ச்சிப் போட்டியில் தெலுங்கு இரசிகர்ளுக்குத்தான் விருந்து.

## சேவல் விஜய்



"தலைவா' படத்துக்குப் பிறகு மீண்டும் விஜய்யை வைத்தே அடுத்த படத்தை இயக்கப் போகிறார் இயக்குநர் விஜய் என்று தகவல்கள் பரவிக் கொண்டிருக்கும் நிலையில், குழந்தைகளுக்கான படமொன்றையே அடுத்து அவர் இயக்கப் போகிறார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

பொதுவாக பெரியநடிகர்களை வைத்துப் படம் இயக்கியவர்கள், அடுத்தடுத்து தங்கள் மதிப்பை உயர்த்து வதற்காக உச்சநிலை நடிகர்களை வைத்துத் தான் படம் எடுப்பார்கள்.

ஆனால், அஜித், ஆர்யா, விக்ரம், விஜய் என முன்னணி நடிகர்களை இயக்கிய விஜய், அடுத்தடுத்து ரஜினி, கமல் போன்றவர்களை இயக்குவார் என எதிர்பார்த்தால், குழந்தைகளுக்கான படம் எடுக்கப் போகிறேன் என்று அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

'தெய்வத் திருமகள்' படத்தில் நடித்த சாரா தான் இந்தப் படத்தின் முக்கியமான பாத்திரமாம். கோவிலுக்குப் பலி கொடுக்கப்படுவதற்காக சாராவின் வீட்டில் ஒரு சேவல் வளர்க்கப் படுகிறது. அது தெரியாமல் சேவலிடம் பாசமாக இருக்கிறாள் சாரா.பலி கொடுக்கும் நாளும் வருகிறது. திடீர் திருப்பமாக சேவல் காணாமல் போகிறது. அந்த சேவல் என்ன ஆனது என்பது தான் படத்தின் மீதிக்கதை. படத்துக்கு சேவல் என்று பெயரிடப்படவுள்ளது.

## மீண்டும் எம்.ஜி.ஆர்



எம்.ஜி.ஆர். நடித்த 'சிரித்து வாழ வேண்டும்' படத்தை அப்படியே உருவியெடுத்து இப்போது ஹிந்தியில் உருவாகி வருகிறது ராம் சரண் நடிக்கும் 'ஜன்ஜீர்' படம். ராம் சரண் பொலிஸ் அதிகாரியாக நடிக்கும் முதல்ப் படம் இது. பிரியங்கா சோப்ரா ஜோடியாக நடித்துள்ள இந்தப் படத்தை ஹிந்தியில் இருந்து தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலும் மொழிமாற்றம் செய்துவெளியிடும் திட்டம் இருக்கிறதாம். எப்படியோ இன்னமும் எம்.ஜி.ஆர் ஏதோ ஒருவகையில் மீள்பதிப்புப் படங்கள் மூலமாக வாவது வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று ஆனந்தப்படுகிறார்கள் எம்.ஜி.ஆர் இரசிகர்கள்.

## புரட்சிப்படம்



'பேராண்மை' படத்துக்குப் பிறகு நீண்ட காலம் படம் இயக்காமல் இருந்த ஜனநாதன், ஜீவா-ஜெயம் ரவி இருவரும் நடிக்க, ஒரு படத்தை இயக்குவதாக அறிவித்திருந்தார். ஜீவாவால் நடிக்க முடியாத சூழலில், இப்போது 'விஜய் சேதுபதி' நடிக்கிறார். விரைவில் இந்தப்படம் தொடங்கப்படவுள்ளது. ஜனநாதனின் முன்னைய படங்களைப் போலவே இதுவும் சமூக விழிப்புணர்வை மையமாகக் கொண்ட புரட்சிக்கதையைக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்

கிருஷ்ணவேணி

பெண் புரியாத புதிரல்ல
புரிந்து கொள்ளக் கூடிய
புதுக் கவிதைதான்.

தேய்பிறையை சந்திக்கும் நிலவல்ல
நிலையாய் மின்னும்
விண்மீன்கள்!

பெண் அடிமை தான்
அதிகாரத்திற்கல்ல
அன்பிற்கு மட்டும்.

பெண்கள் கண்ணாடி அல்ல ஆனால்.
நாட்டின் கண்கள்.

பெண்புரியாத புதிரல்ல
புரிந்த கொள்ளக் கூடிய
புதுக் கவிதைதான்.

## தலைமுடி உதிராமல் இருக்க:



நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், ஒலிவ் எண்ணெய் இதில் ஏதேனும் ஒன்றை வெது, வெதுப்பாகக் காயவைத்து, பஞ்சில் தோய்த்து, முடியின் வேர்க் கால்களில் தேய்க்கவும். பின் விரல் நுனிகளால் மிதமாக தலையை அழுத்தி விடவும். பெரிய பல் கொண்ட தலை வாரும் சீப்பால் இருபது முறை அழுத்தி வாரி விடவும்.


பின்பு இருபது நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் தலையை நன்கு அலசவும். இவ்வாறு வாரம் இருமுறை அல்லது ஒரு முறையாவது செய்யலாம்.

**முடி அதிகமாகக் கொட்டினால்:**

செம்பருத்தி இலை, செம் பருத்திப் பூ, எலுமிச்சைத் தோல், தோடம்பழத் தோல், வேப்பிலை, மருதாணி இலை இவற்றை நிழலில் உலர்த்தி, நன்கு அரைத்து தூள் போன்று (பவுடர்) செய்து, இதில் நெல்லிக்காய் பவுடரும் சேர்த்து, தயிர் அல்லது முட்டையுடன் சேர்த்து எண்ணெய் தேய்த்த பின், இந்தக் கலவையை, மயிர்க் கால்களில் தடவி 20 நிமிடம் நன்கு ஊற வைத்து பின் நீரில் தலை முடியை அலசவும் இதை வாரம் ஒரு முறை செய்தால் அதிக முடி உதிர்தல் குறையும்.

குறிப்பு: இதையும் தாண்டி முடி அதிகமாக உதிர்ந்தால் உரிய மருத்துவரை அணுகவும்.

# முக்தர் மயி
## பழங்குடிப் பெண் போராளி



பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தின் மலைக் கிராமம் மீர்வாலா. அது மச்தோய் பலோச் என்ற பழங்குடியினர் அதிகமாக வாழும் கிராமம். 2002 ஆம் ஆண்டு, தனது பதினான்கு வயதான தம்பி எதிரிக் குடியினரின் பெண்ணுடன் சுற்றுவதாக கிளம்பிய வதந்தியால் பஞ்சாயத்து கூடப் படுவதை கண்டு மனம் பதை பதைத்து ஓடி வருகிறாள் முப்பது வயதுப் பெண் முக்தர் மயி.

என் தம்பி ஒரு பாவமும் அறியாதவன். அவனை விட்டு விடுங்கள் என்று பஞ்சாயத்தினர் முன் கெஞ்சிக் கதறி அழுகிறாள். பஞ்சாயத் தினரோ.

உனது தம்பி நமது குடிக்கு கேடு விளைவித்து விட்டான் அவனை மன்னிக்க வேண்டுமென்றால் நீ அதற்கு பரிகாரம் செய்யவேண்டும் செய்வாயா? எனக் கேட்கின்றனர்.

தனது தம்பி மேலுள்ள பாசத்தினால் வரப் போகும் ஆபத்தை அறியாத அந்த அபலைப் பெண் சரி என்பதாகத் தலையை ஆட்டுகிறாள். பஞ்சாயத் தினர் நிரூபிக்கப்படாத அந்த வதந்திக்கு அதிர்ச்சி யான தீர்ப்பை வழங்குகிறார்கள். இந்த பெண்ணின் சகோதரன் தனது நடத்தையினால் நமது குடிக்கு அபகீர்த்தி விளைவித்துவிட்டான். எனவே இந்த பெண்ணின் வேண்டுகோளை ஏற்று பஞ்சாயத்து ஒரு நியாயமான தீர்ப்பை வழங்குகிறது. நம் குடியில் உள்ள நால்வர் இந்தப் பெண்ணை நம் கிராமத்து மக்கள் அனைவரின் முன்னிலையில் வன்புணர்ச்சி செய்யவேண்டும். அதன்பின்னர் இந்த குடும்பத்தினர் அனைவரும் அதனை நினைத்து நினைத்து வெட்கி வாழ்நாள் முழுதும் வாழ வேண்டும். இதை கேட்டு அதிர்ந்து போன அந்த பெண்ணின் தந்தை பஞ்சாயத்தின் முன் கீழே விழுந்து அழுது புரள்கிறான். அவனை உதா சீனப்படுத்தி விட்டு கிராமத்தின் முன்னி லையில் அந்த அக்கிரமம் முக்தரின் அலறலின் நடுவே அரங்கேறுகிறது. ஒட்டு மொத்த கிராமமும் அந்த அட்டூழியத்தை கண்டு அமைதியாக இருக்கிறது. அந்த நால்வரும் முக்தரை சின்னா பின்னப்படுத்தி போடுகிறார்கள். கந்தலாக கிடந்த முக்தரை அவளது தந்தை கதறியபடி ஒரு ஆடையை போர்த்தி வீட்டுக்கு தூக்கி போகிறார்.

தனக்கு நேர்ந்த துன்பத்தைஎண்ணிஎண்ணி முக்தர் அழுது தற்கொலைக்கு முயன்று தோற் கிறாள். அவள் தனது குடும்பத்தின் துணை யோடும் நண்பர்களின் ஆதரவுடனும் உடல் நிலையிலும், மன வலிமையிலும் தேர்ச்சி பெறு கிறாள். அவளுடைய பால்ய தோழிகளான நசீன் அக்தர். நசீம் அக்பர் மற்றும் ஜமில் அஞ்சும் அவளுக்கு உறுதுணையாக இருந்து தோள் கொடுக்க ஒரு இஸ்லாமிய இமாமின் துணை கொண்டு பொலிஸ் நிலையத்தில் தனக்கு நேர்ந்த அநீதியை – அரக்க செயலை– முறையிட் டாள். அந்த முறைப்பாடு முதலில் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. தான் கற்பழிக்கப்பட்டவள் என வெளிப் படுத்திக் கொள்ள எந்தப் பெண்ணும் சம்மதிக்க மாட்டாள் என்கிற தைரியத்தில் அவளது கிராமத்து பஞ்சாயத்து மனிதர்கள் இருந்தனர். ஆனால் முக்தரோ தனது தோழர்களுடனும் அந்த இஸ்லா மிய இமாமின் உதவியுடனும் தனக்கு நேர்ந்த கொடுமையை ஊடகங்களின் வாயிலாக உலகுக்கு தெரிவித்தாள்.

இந்த அநீதி உலகெங்கும் பறை சாற்றப்பட பாகிஸ்தானின் அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டு அவளுக்கு தண்டனை அளித்த கொடியவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டு ஆறு பேருக்கு மரண தண் டனை விதிக்கப்பட்டது. தீர்ப்பு வாசிக்கப்பட்டதும் மகிழ்வடைந்த முக்தர் இப்படி சொல்கிறாள்.

இது எனக்கு உண்டான தீர்ப்பு அல்ல, இது போன்ற தீர்ப்பு எழுதும் பஞ்சாயத்தருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு. கல்வி அறிவும், உலக அறிவும் இல்லாத பெண்களை கொடுமை செய்யும் உலகத் தினருக்கு எதிரான தீர்ப்பு என முழங்கினாள்.

அவளுக்கு அரசாங்கத்தின் பேரில் நாலு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது. இஸ்லாமா பாத்தின் முக்கிய இடத்தில் முக்தர் தன் குடும் பத்துடன் வசிக்க ஒரு பெரிய வீடும் கொடுக்கப் பட்டது. அதனை மறுத்துவிட்ட முக்தர். அரசு தனக்கு அளித்த நாலு இலட்சத்தில் தனது கிராமமான மீர்வாலாவில் பெண்களுக்கான பள்ளி ஒன்றை துவக்கினாள். அவளும் அவளது தோழிகளும் இளம் பெண்களுக்கான விழிப்புணர்வு வகுப்பு களை எடுக்கத் துவங்கினார்கள். சமுதாயத்தை எதிர் கொள்ளும் பக்குவம் அங்கு பெண்களுக்கு போதிக் கப்படுகிறது.

தானும் ஒரு மாணவியாய் அந்த பள்ளியில் கல்வி கற்றார் முக்தர். தனது பள்ளியில் மற்ற மாணவிய ரோடு தானும் மாணவியாய், அறியாமையே பெண்களுக்கெதிரான குற்றங்களுக்கு காரணம் என்பது முக்தர் மயியின் முழக்கம். அந்த அறி யாமை இருளை இன்றைய இளம் பெண்களிடம் இருந்து அகற்றவே அவர் பள்ளிகள் துவங்கி உள்ளார். உலகம் முழுதும் அவர் வரவேற்கப்படுகிறார். பல விருதுகள் அவரை தேடி வருகிறது.

அவற்றில் சில,

ஆகஸ்ட் 2. 2005 பாகிஸ்தான் அரசாங்கத்தின் வீர தீர செயல்களுக்கான பாத்திமா ஜின்னா தங்க பதக்கம்.

நவம்பர் 2. 2005 அமெரிக்க இதழான கிளாமர் இந்த வருடத்தின் சிறந்த பெண் (woman of the year) என கௌரவம்.

ஜனவரி 2006 – அவரது கதை ஜேர்மனியில் ஜேர்மன் மொழியில் மற்றும் பாரிசிலிருந்து பிரெஞ் மொழியிலும் புத்தகமாக வெளி வந்தது. அதனை வெளியிட அவர் பாரிசுக்கு அழைக்கப்பட்டு அர சாங்க மரியாதை அவ ருக்கு அளிக்கப்பட்டது.

2 மே 2006 இல் நியூயோர்க்கின் ஐ. நா. சபையில் அவர் பேட்டி காணப்பட்டு அது ஒளிபரப்பானது, அவர் அங்கு சொன்னது. தனது நீதிக்காகவும் தனது அடுத்த தலைமுறையின் நீதிக்காகவும் தான் பாடுபடப் போவதாக சொன்னார்.

மார்ச் 2007 இல் வடக்கு, தெற்கு விருது ஐரோப்பா ஒன்றியத்தால் வழங்கப்பட்டது.

பெண் இன கொடுமைகளால் மனம் புழுங்கி உள்ளுக்குள்ளேயே தவித்திருக்கும் பெண்களுக்கு மத்தியில் முக்தர் மயி ஒரு எடுத்துக்காட்டு.

*** *** ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தினமும் 86400 ரூபா உங்களுக்கு

**ஒரு சின்ன கற்பனை.**

ஒரு போட்டியில் உங்களுக்கு ஒரு பரிசு கிடைத்திருக்கிறது.

பரிசு என்னவென்றால் - ஒவ்வொரு நாள் காலையிலும் உங்கள் வங்கிக் கணக்கில் 86,400 ரூபாய் உங்கள் சொந்த செலவுக்காக வரவு வைக்கப்படும்.

ஆனால் இந்தப் பரிசுக்கு சில நிபந்தனைகள் உண்டு.

அவை -

1) அந்த நாளில் நீங்கள் செலவு செய்யாத பணம் உங்கள் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டுவிடும்.

2) உங்கள் பணத்தை நீங்கள் வேறு ஒருவரின் கணக்குக்கு மாற்ற முடியாது.

3) அதை செலவு செய்ய மட்டுமே உங்களுக்கு உரிமை உண்டு

4) ஒவ்வொரு நாளும் விடியும் போது உங்கள் வங்கிக் கணக் கில் அந்த நாளின் செலவுக்காக 86400 ரூபாய் வரவு வைக்கப்படும்

5) எப்போது வேண்டுமானாலும் வங்கி இந்த ஆட்டத்தை முன்னறிவிப்பு இல்லாமல் நிறுத்திக் கொள்ளலாம்.

6) வங்கி - முடிந்தது கணக்கு என்று சொன்னால் அவ்வளவு தான். வங்கிக் கணக்கு மூடப் படும், மேற்கொண்டு பணம் வரவு வைக்கப் படமாட்டாது.

இப்படி இருக்கும் பட்சத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

உங்களுக்கு பிடித்த எல்லாம் வாங்குவீர்கள் இல்லையா?

உங்களுக்கு மட்டுமல்லாமல் உங்கள் மனதுக்கு பிடித்தவர்களுக்கும் வாங்கித்தருவீர்கள் இல்லையா? உங்களுக்கு முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுக்காகவும் செலவு செய்வீர்கள். ஏனென்றால் அவ்வளவு பணத்தையும் உங்களுக்காக மட்டுமே செலவு செய்வது சாத்தியமில்லை என்பதால் - அப்படித்தானே? முடிந்தவரை ஒவ்வொரு ரூபாயையும் எப்படியாவது செலவு செய்து உபயோகிப்பீர்கள்தானே?

உண்மையில் இது ஆட்டமில்லை - நிதர்சனமான உண்மை

ஆம்

நம் ஒவ்வொருவருக்கும் இப்படியான ஒரு வங்கிக் கணக்கு இருக்கிறது. நாம் தான் அதைக் கவனிப்பதில்லை.

அந்த ஆச்சரிய வங்கிக்கணக்கின் பெயர் - காலம்.

ஒவ்வொரு நாள் காலையும் நாம் எழுந்திருக்கும் போது வாழ்க்கையின் அதியுன்னத பரிசாக 86400 வினாடிகள் நமக்கு வழங்கப் படுகின்றன

இரவு தூங்கப் போகும் போது நாம் மிச்சம் வைக்கும் நேரம் நமக்காக சேமித்து வைக்கப்படுவதில்லை.

அன்றைய பொழுது நாம் வாழாத வினாடிகள் தொலைந்தது தொலைந்தது தான்.

நேற்றைய பொழுது போனது போனது தான்.

ஒவ்வொரு நாள் காலையிலும் புத்தம் புதிதாக நம் கணக்கில் 86400நொடிகள்.

எச்சரிக்கையே இல்லாமல் எப்போது வேண்டுமானாலும் வங்கி உங்கள் கணக்கை முடக்க முடியும்.

அப்படியிருக்கும் பட்சத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

உண்மையில் 86400வினாடிகள் என்பது அதற்கு சமமான அல்லது அதற்கும் மேலான பணத்தை விடவும் மதிப்பு வாய்ந்தது அல்லவா?

இதை ஞாபகம் வைத்துக்கொண்டால் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் நாம் கொண்டாடிக் கழிக்க மாட்டோமா? காலம் நாம் நினைப்பதை விட வேகமாக ஓடிவிடும்.

எனவே உங்களைப் பொன் போல பேணுங்கள் - சந்தோஷமாக இருங்கள் - சுற்றியுள்ளவர்களை ஆழமாக நேசியுங்கள் - வாழ்க்கையைக் கொண்டாடுங்கள்.

# அதை எப்படிச் செய்ய வேண்டும்

*இயல்பாக மரியாதையுடன் பின் தரப்பட்டுள்ள கேள்விகளை அல்லது அது போன்ற கேள்விகளைக் கேளுங்கள். உங்களுக்குப் பொருந்துகின்ற முறையில் இந்தக் கேள்விகளில் தேவையான மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்.*

*1. (உங்கள் யோசனையைக் கூறி) இதைச் செய்தால் என்ன ஆகும் என்று நினைக்கிறீர்களா?*

*2. (உங்கள் யோசனையைக் கூறி) ஒரு வேளை நமது கம்பனி இந்த யோசனையை பரிசீலனை செய்து பார்த்தால்- இப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?*

*3. (உங்கள் யோசனைகளைக் கூறி) இந்த யோசனைகள் வாயிலாக உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும் என்று நினைக்கிறீர்களா?*

*4. (உங்கள் யோசனைகளைக் கூறி) இந்த யோசனைகள் வாயிலாக உற்பத்தி வேகம் அதிகரிக்கும் என்று கருதுகிறீர்களா?*

*5. (உங்கள் யோசனையைச் சொல்லி விட்டு) இதன் படி செய்தால் வாடிக்கையாளர்கள் எப்படி அதனை வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்?*

*6. (உங்கள் யோசனையைத் தெரிவித்த பிறகு) இதன் படி செய்தால் தொழிலாளர்கள் இதை ஏற்பார்கள் என்று நினைக்கிறீர்களா?*

*மேலே கொடுக்கப்பட்டிருப்பவை போதுமான உதாரணங்கள் இந்த முறையில் முக்கியமாக- இப்படி நடந்தால் இன்னது நடக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா என்ற முறையில் கேள்வி கேட்கிற முறையில்- உங்கள் யோசனைகளை அதிபரிடம் தெரிவிக்க வேண்டும்.*

*இப்படி நடந்தால் என்று தெரிவிக்கிற முறையில் பல சாதகங்களும் பாதுகாப்புகளும் உள்ளன.*



*இந்த வழியில் உங்கள் யோசனைகளைத் தெரிவிக்கும் என்கிற- உங்கள் மேலதி காரியை விட நீங்கள் கெட்டிக்காரர் மேலதிகாரியின் வெறுப்பை சம்பாதிக்க வேண்டிய நிலை உருவாகாது. நீங்கள் செய்தது எல்லாம் இயல்பாக- மரியாதையாக உங்கள் அதிபர் அல்லது மேலதிகாரியின் அனுபவம் மிக்க அபிப்பிராயத்தைக் கேட்டீர்கள் அவ்வளவுதான்.*

*உங்கள் யோசனை தரம் வாய்ந்ததாக இருக்குமானால் - நீங்கள் அதைத் தெரிவித்து விட்ட பிறகு அதற்கான பெருமை உங்களுக்குக் கிடைக்கும் அதன் மூலம் நீங்கள் மேலும் பயன் மிக்கவராகக் கருதப் படுவீர்கள்.*

*(கேள்விகள் அடுத்த வாரமும்)*


**சுடர் ஒளி வாசகர்களே !**

குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பம்பல் பரமசிவம்

# கதிரையும் கதியும்

**“கல்வி எண்டுறது பிள்ளை யளுக்குச் சுமை இல்லாமலிருக்க வேணும். அதுக்காகத்தான் விளை யாட்டு விளையாட்டாய்க் கல்வி யைப் புகட்ட வேணு மெண்டு சொல்லுறது.**

**போ**ன முறை ‘கவிதை,’ ‘தவிடு’ பற்றி எழுதியதற்குப் பின்னர், ரெண்டு மூண்டு பேர் கதைக்கேக்கை, அது போல - அதுதான் ‘கவிதை’ ‘தவிடு’ போல- தமிழிலை இன்னும் பல சொற்கள் இருக்குது எண்டு சொல்லிச்சினம். எனக்கு வலுசந்தோசம். ஒண்டு ரெண்டு பேரின்ரையெண்டாலும் ‘சிந்தனைக் குதிரையைத்’ தட்டி விட்ட தெண்ட சந்தோசம்.

அதை அவைக்கு நான் சொல்ல, ‘பாத்தியளே!,’ பரமசிவம் கண்டு பிடிச்சிட்டார்.. ஒரு சொல்லுக் ‘குதிரை’ ..’ எண்டு சொல்லிச்சினம்.

ஓம் . குதிரை எண்டுறதிலை ஒரு எழுத்தை விட்டால், மற்ற சொற்களுக்கு அர்த்தம் இருக்குது. குதிரையிலை ‘கு’ வைவிட்டால் திரை . ‘தி’ யை விட்டால், குரை . அதேபோல, ‘ரை’ யை விட்டால், ‘குதி’

அது இப்ப ரொபிக் இல்லை. இப்ப ‘ரொபிக்’ ‘கதிரை’ . கதிரையும் அப்பிடித்தான். கவிதை, தவிடு, குதிரை மாதிரி. கதிரையிலை, ‘க’வை விட்டால், திரை. திரைக்குப் பின்னால் என்னனென்ன நட்க்குதோ? ‘தி’னவை விட்டால், ‘கரை’ கதிரை கிடைச்சால் தான் சிலபேர் கரையேறுவினம். ரையை விட்டால் ‘கதி’ . சிலபேற்றை ‘கதி’ கதிரையிலைதான் இருக்குது.

இதே போல இன்னும் பல சொற்கள் தமிழிலை இருக்குது.... ‘மதுரை,’ ‘வதிரி,’ ‘பகுதி’ ‘மிகுதி’ ‘வகுதி’ .. இந்தச் சொற்களிலையும் ஏதாவது ஒரு எழுத்தை விட்டால், மற்ற எழுத்துக்களாலை உருவாகிற சொல்லுகளுக்கு அர்த்தமிருக்குது.

இப்பிடி நினைச்சுப் பார்த்தால் ஒரு ஆயிரம் சொற்கள், கண்டு பிடிக்கலாம். இப்ப உதுகளைக் கண்டு பிடிக்க யாருக்கு ‘ரைம்’ இருக்குது? ஆனால் இப்பிடியான உத்திகளை வைச்சு, தமிழ் சொற்களஞ்சியத்தை விளையாட்டு, விளையாட்டாய் பிள்ளையளிடம் கொண்டு செல்லலாம். நாங்கள் நினைக்காத பல விடயங்களை அவை கண்டு பிடிச்சுச் சொல்லுவினம். அவைக்கு அது ஒரு சவாலாகவும் அமையும். இப்பத்தையப் படிப்புகள் எல்லாம், ‘கிளிப் பிள்ளைப்’ படிப்பாய்ப் போச்சுது.... சொல் லிக் கொடுக்கிறதை அப்பிடியே பாடமாக்கி பரீட்சை எழுதுறது..... ஒன்றும் ‘அப்பிளை’ பண்ணுற - பிரயோகிக்கின்ற - உத்தியள் பயன் படுத்திறதில்லை.

கல்வி எண்டுறது பிள்ளையளுக்குச் சுமை இல்லாமலிருக்க வேணும். அதுக்காகத்தான் விளையாட்டு விளையாட்டாய்க் கல்வியைப் புகட்ட வேணுமெண்டு சொல்லுறது.

படிப்பு எண்ட உடனைதான் ஒண்டு ஞாபகத்துக்கு வருகுது. முந்தி எங்கடை படிப்பு வேறை. இப்பத்தையப் படிப்புகள் வேறை.. ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை.. ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே என்ற பாட்டு, எங்கடை அம்மாவுக்குத் தெரியும்... அவைவின்ரை அம்மாவுக்கும் - அதாவது அம்மம்மாவுக்கும் தெரியும். வீட்டிலை பிள்ளையளுக்கு, ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை பாட்டுச் சொல்லிக் கொடுக்க வெளிக்கிட எல்லாரும் சேர்ந்து பாடுவினம். இல்லாட்டி பிள்ளையள் பாட இடர்படுகிற நேரத்திலை, அவையள் சொல்லிக் குடுப்பினம். இப்ப என்னடா எண்டால், அத்தகைய பாட்டுக்கள், நீக்கப்பட்டு, புதுப் புதுப் பாட்டுக்கள்....புத்தகம் எழுதுற ஆக்கள் தங்கடை கெட்டித்தனத்தைக் காட்டவும், தங்கடை சில விசுவாசங்களைக் காட்டவும், புறப்பட்டு, இத்தகைய பாட்டுக்களை எங்கடை சமூகத்தில இருந்து அந் நியப்படுத்திப் போட்டினம். புள்ளை பாடுற பாட்டு அம்மாவுக்குத் தெரியாது, அம்மா பாடுற பாட்டு பிள்ளைக்குத் தெரியாது.... அம்மம்மாவுக்கு இது ஒண்டும் தெரியாது. புழையன கழிதலும் புதியன புகுதலும் குற்றமில்லைத்தான். ஆனால் ஒரேயடியாக, தடாலடியாக மாற்ற வெளிக்கிட்டால் அவலம்தான். அப்பிடித் தான் எங்கடை தாலாட்டு, அது இதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போவிட்டுது, அதுகள் பாடத்திலை இருக்குமெண்டால், படிப்பு எண்டுறது தங்களோடை சம்பந் தப்பட்ட ஒரு விசயம் எண்டுற

## எப்படியிருந்த த்ரிஷா...?



தமிழ் சினிமாவில் கடந்த 10 வருடங்களாக தனது நடிப்பினை பதித்து வந்த த்ரிஷாவின் மதிப்புக் குறைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது தெலுங்கில் த்ரிஷாவுக்கு சுத்தமாக படங்கள் எதுவுமில்லை. தமிழில் ஜெயம் ரவியுடன் பூலோகம் மற்றும் ஜீவாவுடன் என்றென்றும் புன்னகை ஆகிய படங்கள் மட்டுமே கைவசம் உள்ளன.

இதனைத் தொடர்ந்து கௌதம் மேனன் இயக்கும் துருவ நட்சத்திரம் படத்தில் சூர்யாவுக்கு த்ரிஷா தான் ஜோடி என்றார்கள். ஆனால்,அந்தப் படம் கைவிடப்பட்டுள்ளது.

இதுவரை தனியான கதாநாயகியாக மட்டும் தான் நடிப்பேன் என்று நிபந்தனை போட்ட த்ரிஷா தற்போது இரண்டு கதாநாயகிகள் குறித்த கதையாக இருந்தாலும் நடிப்பது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்.

இந்தநிலையில் 3 கதாநாயகிகளில் ஒருவராக நடிக்க த்ரிஷாவுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.ரம் படத்தில் 3 கதாநாயகிகளில் த்ரிஷாவும் ஒருவர். அவருடன் ஓவியா, பூனம் பாஜ்வா ஆகியோரும் நடிக்கின்றார்கள். எப்படியிருந்த த்ரிஷா இப்படியாகிவிட்டாரே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — இரக்குமதிச் சந்திப்பு —

## இலக்கியத்தில் இன்னொரு அபாய ஒலி

சபா. நாவலன்



புலம்பெயர் நாடுகளில் இது வரை நடைபெற்றுவந்த இலக்கியச் சந்திப்பின் ஒரு பகுதியினர் இணைந்து இலங்கையில் இச்சந்திப்பை நடத்துகின்றனர். 41 வது இலக்கியச் சந்திப்பு என்று அழைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் இந்த இலக்கியச் சந்திப்பில் குவர்னிகா என்ற நாலும் வெளியிடப்படுகிறது.

இலங்கை அரச ஆதரவாளர்கள், இலங்கை அரச துணைக் குழுக்களின் உறுப்பினர்கள், தன்னார்வ நிறுவனங்களின் உறுப்பினர்கள், தலித் அடையாள அமைப்புக்கள், பின் நவீனத்துவக் குழுக்களைச் சார்ந்தவர்கள் ஆகியோரின் ஒன்றுகூடலாக இந்த நிகழ்வு இலங்கையில் நடத்தப்படுகிறது.

வடக்கின் தேர்தலாகட்டும், தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தப்படும் நிகழ்வுகளாகட் டும் இலங்கையில் இயல்பு நிலை திரும்பிவிட்டதான அறிவிப்புக்களாகவே வெளிக்காட்டப்படுகின்றன.

தமது இருப்பையும் அடையாளத்தையும் பேணிக்கொள்ளவும் அதனை முன்வைத்துப் பிழைப்பு நடத்தவும் புலம் பெயர் குழுக்கள், மக்களின் அவல வாழ்வைப் பயன்படுத்தி வருகின்றன. புலிகளின் அழிவின் பின்னர் அவசர அவசரமாக உதித்த பல குழுக்கள் தமது அடையாளம் சார்ந்த ஒவ்வொரு தளத்திலும் தத்தமது வர்க்க நலன்களைச் சார்ந்து இயங்கி வருகின்றன.

புலியெதிர்ப்புக் கும்பல்களின் மேல்தட்டு வர்க்க நலன் சார்ந்து சிங்கள பௌத்த பேரினவாத அரசின் உயர்தட்டு வர்க்கங்களுடன் சமரசத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். புலி ஆதரவுப் பிழைப்பு வாதிகள் கொள்கையை மாற்றிக் கொண்டு இதே மேல் தட்டு வர்க்கத்துடன் கைகோர்த்துக் கொண்டுள்ளனர். இவர்களின் சமரசத்திற்குப் பாலமாக அமையும் தன்னார்வ நிறுவனங்கள் மனிதாபிமான முகமூடிகளோடு இலங்கையில் ஜனநாயகத்தை உருவாக்கப் போவதாக இந்த இரண்டு தரப்போடும் இரண்டறக் கலந்துள்ளனர்.

மனிதாபிமானம், இனவாதத்திற்கு எதிர்ப்பு, ஜனநாயகம், புரட்சி போன்ற அழகான முழக்கங்களோடு மக்கள் மத்தியில் முளைக்கும் இந்த நச்சுக் களைகள் ஈழத் தமிழர்களின் தன்னுரிமைக்கான போராட்டத்தை இன்னும் பல ஆண்டுகளுக்கு பின்னோக்கி இழுத்துச் செல்கின்றனர்.

முப்பதாயிரம் போராளிகளின் உடல்களால் உரமாகியிருக்கும் மண்ணில் இப்போது களைகள் மட்டுமே முளைக்கின்றன, அதன் வித்துக்கள் புலம் பெயர் மண்ணிலிருந்தும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தமிழ்ப் பேசும் மக்கள் மீதான இனச்சுத்திகரிப்பு அவர்களின் தேசிய இன அடையாளத்தின் இருதயப் பகுதியான கலை பண்பாட்டுத் தளத்தில் மிருக வெறியோடு நடத்தப் படுகிறது. சந்திக்குச் சந்தி புத்தர் சிலைகளை நட்டுவைத்து விட்டு சமாதானம் என்கிறார்கள். இராணுவம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில் பியர் போத்தல்களை வழங்கிவிட்டு இயல்பு வாழ்க்கை என்கிறார்கள். பள்ளி மாணவர்களுக்குப் போதைப் பொருட்களை வழங்கி விட்டு மகிழ்ச்சி என்கிறார்கள். வறுமையைப் பாலியல் தொழிலாக்கி விட்டு வளர்ச்சி என் கிறார்கள்.

இவை அனைத்தும் ஜனநாயகம் என்றும் எதிர்ப்போரை இனவாதிகள் என்றும் மகிந்த பாசிசத்தின் புதைகுழிகளை தாண்டி யாழ்ப்பாண மண்ணிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இலக்கியச் சந்திப்பு இன்னொரு அபாய ஒலி.

நன்றி– இனியொரு (இணையம்)

## நச்சுப்பட்ட இலக்கியச் சூழல்

அபயன்

மிக அண்மையில் ஒரு இலக்கிய நண்பரைச் சந்திக்க நேர்ந்தது.

நீங்க ஏன் அந்த இலக்கிய சந்திப்புக்கு வரவில்லை? என்று அவர் கேட்டார்.

என் கொள்கைக்கும் அதற்கும் வேறுபாடுகள். அதனால் மனம் ஒவ்வாத இரு நிகழ்வுக்கு எப்படிப் போக முடியும்? என்றேன்.

ஆனால் அவர் விடுவதாக இல்லை.

அதெப்படி? உங்களுக்குப் பிடிக்காத கருத்துக்கள் இருந்தாலும், அதில் கலந்து கொள்வது தானே அழகு. நான் அதில் கலந்து கொண்டேன் என்றார்.

உங்கள் அரசியலும் அவர்களின் அரசியலும் ஒரே அலை வரிசை என்றால் நீங்கள் கலந்து கொள்ளலாம். ஆனால் என் நிலை வேறு என்று கூறினேன்.

அப்படியல்ல. அவர்களின் அரசியல் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் கிடைக்கும் சந்தர்ப்பத்தை நாம் ஏன் நழுவவிட வேண்டும். எங்களுக்கு ஒரு கட்டுரை வாசிக்கும் மேடை கிடைக்கிறது. எங்கள் கருத்தைக் கேட்கும் ஆளுமைகள் கிடைக்கிறார்கள். அவற்றை இழப்பதால் என்ன இலாபம்? என்று அவர் கேட்டார்.

கிட்டத்தட்ட ஒரு கடைக்காரர் பேசுவது போன்று, அவரின் கருத்து எனக்குப் பட்டது. இப்போது இலக்கியப் படைப்பாளிகள் பலரிடம் இலட்சியம், கொள்கை, சமூக நோக்கு இவையெதுவும் இருப்பதில்லை. அவர்களுக்கு தேவையானதெல்லாம் தமது படைப்புகளைப் பிரசுரமாக்குதலும், அவற்றை ஏதேனும் இந்திய அல்லது புலம்பெயர் பதிப்பகங்கள் ஊடாக புத்தகமாக்குதலும், அவர்களின் படைப்புகள் பற்றி ஆஹா, ஓஹோ எனப் புகழ்ந்து தள்ளும் கூட்டமும் மட்டும் தான். இவ்வளவும் இருந்து விட்டால், அவர்கள் யார் கூப்பிட்டாலும் போவார்கள். எங்கும் எதுவும் பேசுவார்கள். காலையில் பெண்ணடிமை பற்றி மேடையில் முழங்குபவர்கள். மாலையில் இன்னொரு நிகழ்வில் பெண்ணடிமை என்ற ஒன்றே உலகில் இல்லை என்பது போல நாக்கை மாற்றிக் கொள்வார்கள்.

மிக மோசமான இலக்கியச் சூழலுக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு இத்தகைய சம்பவங்கள் நல்ல உதாரணங்கள். முன்னைய காலங்களில் சமூகத்தின் திருப்புமுனை நிகழ்வுகள் இலக்கிய எழுது கருவிகளில் இருந்தே பிறப்பெடுத்தன. ஆனால் இப்போதே படைப்பாளிகளின் சமூக அந்தஸ்தை உயர்த்துவதற்காகவே அவர்களின் எழுது கருவிகள் இயங்குகின்றன. பணத்துக்காகவும் அதிகாரத்துக்காகவும் எப்படி வேண்டுமானாலும் அவர்களின் எழுது கருவிகள் வளைந்து கொடுக்கத் தயாராகிவிட்டன. கொள்கைக்காகவே உயிரையும் துறந்த பல இலக்கிய ஆளுமைகள் உருவெடுத்த தமிழிலக்கியச் சூழல் இப்படி நச்சுப்பட்டுவிட்டதே?

## யாழ்ப்பாணப் புத்தகக் கண்காட்சி கைவிடப்பட்டுவிட்டதா?

யாழ்ப்பாணத்தில் புத்தகக் கண்காட்சி ஒன்றில் கலந்து கொள்ளவிருந்த தென்னிந்திய புத்தகப் பதிப்பு மற்றும் விற்பனை நிறுவனங் களின் சங்கம். இது குறித்து தமிழ் தேசிய அமைப்புகளிடமிருந்து எழுந்த எதிர்ப்பால் குறித்த புத்தகக் கண்காட்சியில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை எடுத்துள்ளது.

தென்னிந்திய புத்தக பதிப்பு மற்றும் விற்பனை நிறுவனங்களின் சங்கத்தின் தலைவர் ஆர்.எஸ்.ஷண்முகம் இது குறித்துக் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் கிரின் க்ளாசிக் எக்ஸ்போட்டர்ஸ் என்ற நிறுவனம், யாழ்ப் பாணத்தில் நடத்தவுள்ள ஒரு புத்தகக் கண்காட்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. இதைப் பற்றி பரிசீலித்து முடிவு செய்ய, எங்களது அமைப்பு ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தது.


இந்த நிலையில், அந்தக் கண்காட்சியில் கலந்துகொள்வது என்பது தற்போதைய சூழலில் இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு ஒப்பாகும் என்று சீமான் போன்ற சிலர் அறிக்கை விடுத்திருந்தனர். வேறு பலரும் எம்மிடம் தொலைபேசியில் எதிர்ப்புத் தெரிவித்தனர். மேலும் தமிழக முதல்வர் ஜெயலலிதா கூட மீனவர் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார். இதன் பின்னணியில், இந்தப் புத்தகக் கண்காட்சியில் கலந்துகொள்வதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது - என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன் - 10

● ஔண்யன்



விக்கி என்பது யார் வேண்டுமானாலும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும், தகவல்களை வழங்கவும் ஏற்படுத்தப் பட்டுள்ள ஒரு சொல்.

விக்கிபீடியா என்ற இணைய அகராதி கூட இந்த வகையைச் சேர்ந்ததுதான். அதனாலேயே ஒரு சுயாதீனப் பொது இணையம் என்பதைக் குறிக்க விக்கிலீக்ஸ் என்ற பெயர் யூலியனால் தெரிவு செய்யப் பட்டது. தன் கொள்கைகளையொத்த நண்பர்களை யூலியன் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈட்பட்டிருந்த போது, பலநாடு களைச் சேர்ந்த வழக்கறிஞர்களின் பரிச் சயமும் யூலியன் அசாஞ்சேக்குக் கிட்டியது. யூலியனைப் போல தானே அவரது நட்பை நாடிய வழக்கறிஞர்களும் இருப்பார்கள். யூலியன் இணையத்தின் ஆதியில் இருந்து அந்தம் வரை - ஒன்றும் விடாமல் - கரைத் துக் குடித்திருந்ததைப் போன்று,

யூலியனைத் தொடர்பு கொண்ட சட்ட அறிஞர்களும் சட்டத்தின் சந்து பொந்து களையெல்லாம் சுண்டுவிரலில் தெரிந்து வைத்திருந்தனர். அவர்கள் விக்கிலீக்ஸ் போன்ற புலனாய்வு இணையமொன்றின் செயல் வடிவங்களுக்கு சட்டப் பாதுகாப்பு எவ்வளவு முக்கியம் என்பதை யூலியனுக்கு விளக்கினர். அதேவேளை சட்டத் தில் உள்ள எந்தெந்த ஓட்டைகளினூடாகச் சிக்கல்களில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என் பதையும் யூலியனுக்குப் போதித்தனர்.

ஏற்கனவே இணையம் என்ற சுனாமியி லேயே சாதுரியமாகத் தூண்டில் போட்டு மீன் பிடிக்கிற யூலியனுக்கு, வழக்கறிஞர் களின் தொடர்ச்சியான உபதேசத்தால் சட்டத்தின் நெளிவு சுழிவுகளும் அத்துப்படி யானதால் விக்கி லீக்ஸின் தகவல் வேட்டைக் கும், அதன் மூலம் ஏற்படப்போகும் சட்ட ரீதியிலான ஆபத்துகளில் இருந்து எக்காலத் திலும் நழுவுவதற்கும் அதிகமான உந்து சக்தி கிடைத்தது. குறித்த வழக்கறிஞர்களின் ஆலோசனைகளை தனது வேத வாக்காகக் கொள்வதால்தான் யூலியன் மீது விக்கிலீக்ஸ் சம்பந்தமாக எந்தவொரு வழக்கையும் தாக்கல் செய்ய முடியாது பல நாடுகளும்- குறிப்பாக யூலியனின் பாய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களும்- வெறுங் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள்.

சட்ட அறிஞர்களின் ஆலோசனைப்படி தான் சுவீடனில் விக்கிலீக்ஸைப் பதிவு செய்வதென்ற முடிவு எடுக்கப்பட்டது. அவ்வாறு சுவீடனைத் தளமாகக் கொள்ளு மாறு வழக்கறிஞர்கள் பரிந்துரை செய்த தற்கும் காரணம் இருந்தது. ஊடகத் தகவல் களின் ஆதாரங்களைப் பற்றிக் கேள்விகள் எழுப்ப முடியாத சட்ட திட்டங்களைக் கொண்ட நாடுகளில் சுவீடன் முதன்மை யானது. எனவே விக்கிலீக்ஸ் இணையத் துக்குத் தகவல்களை வழங்குபவர்களைப் பற்றியோ அதை நிர்வகிப்பவர்கள் பற்றியோ எந்த நாடும் கேள்வி கேட்க முடியாது. ஆனாலும் அவ்வாறு தகவல் கொடுப் பவர்கள் பாதிக்கப்பட்ட நாடொன்றில் தம் வாயாலேயே மாட்டுப்பட்டால், அவர்களுக்கு சிறைக்கம்பிகளை எண்ணும் பாக்கியம் நிச்சயமாகக் கிட்டும்.

தனது வாடிக்கையாளர் விவரங்களை சட்ட ரீதியாகப் பாதுகாக்கும் சுவீடனைச் சேர்ந்த பி.ஆர்.கியூ (PRQ) என்ற நிறுவனத்தினூடாக விக்கி லீக்ஸ் தளத்தினைப் பதிவு செய்யுமாறு யூலியனுக்கு சட்ட ஆலோசகர்கள் உபதேசித் தனர். இதன்படி விக்கி லீக்ஸ் (www.wikileaks.org) என்ற இணையத்தள முகவரி, 2006ஆம் ஆண்டு யூலியனின் பெயரில் பதிவு செய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை யூலியனுக்கு வாழ்க்கை ஒளித்துப் பிடிக்கும் விளையாட் டாகவே மாறிப் போய்விட்டது. சுவீடனில் விக்கிலீக்ஸின் பிரதான இணைய வழங்கியைச் சுவீடனில் பதிவு செய்த சூட்டோடு சூடாக இன்னொரு காரியத்தையும் செய்வதற்கு -பின்னால் வருவதை எதிர்வு சொல்லும் யூலிய னின் மூளை - தூண்டியது. அதன்படி விக்கி லீக்ஸின் பதிவு ஸ்வீடனின் பி.ஆர்.கியூ என்ற நிறுவனத்தில் இருந்தாலும் கூட, விக்கி லீக்ஸ் என்ற முகவரிக்கு ஏறக்குறைய 20 கோப்பு நிரல்களைவிநியோகிக்கும்வழங்கிகள் பெல்ஜியம் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில்உள்ளன. இந்த நாடுகள் எல்லாமே தகவல் பரவலுக்கு சட்டப் படி பாதுகாப்பு வழங்குபவை. ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு வழங்கியில் இருந்து விக்கிலீக்ஸ் தளம் செயல்படும். இதனால் அதன் பிரதான வழங்கி எங்கிருந்து தகவல்களை அப்டேட் செய்கிறது என்பதைக் கண்டுபிடிக்க எந்தவொரு தகவல் தொழில்நுட்பக் கொம் பனும் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டி யிருக்கும். அத்துடன் எந்த நேரத்திலும், எந்த நாட்டின் நிர்ப்பந்தத்துக்காகவும், என்னதான் துன்பம் நேர்ந்தாலும் விக்கிலீக்ஸில் வெளி யிட்ட இரகசியத் தகவல்களை நீக்குவதில்லை என்ற யூலியனின் கொள்கை வசதிக்காகவும் இந்த ஏற்பாடு. (சில வேளைகளில் நான் முன் வைச்ச காலை பின் வைப்பதில்லை என்ற ரஜினிகாந்தின் 'அனல் தெறிக்கும் வார்த்தை களை யூலியனும் அறிந்திருப்பாரோ என்னவோ?) ஏதேனும் ஒரு நாட்டில் விக்கிலீக்ஸின் வழங்கியை யாரும் முடக்கினால் வேறொரு நாட்டில் இருந்து தளம் தடை யின்றி செயற்படும் வண்ணம் அதிவிஷேட பாதுகாப்புப் பொறி முறைகளுடன் அது வடிவமைக்கப்பட்டது.

இதேவேளை விக்கிலீக்ஸ் தளத்திற்கென முழு நேரமாகப் பணிபுரிவது வெறும் ஐந்து நபர்கள் மட்டுமே (யூலியனின் தேடலின் விளைவாகக் கண்டறியப்பட்ட நண்பர்கள்). இதை விட உலகெங்கும் ஆயிரத்துக்கும் அதிக மா னோர் தன்னார்வத் தொண்டர்களாக விக்கி லீக்ஸில் எந்தவிதமான வேதனத்தையும் எதிர்பார்க்காது பணிபுரிகின்றனர். இவ்வாறு தொடங்கப்பட்ட விக்கிலீக்ஸ் இணையத் தளம் உடனடியாகவே துணிச்சலான செய்தி சேகரிப்பில் இறங்கியது. சேகரிக்கப்பட்ட செய்திகள் அல்லது ஆதரங்கள் யாவற்றை யும் ஒரு முறைக்குப் பலமுறை உறுதிப் படுத்தப்பட்டே வெளியிடப்பட வேண் டும் என்பதில் யூலியன் பிடிவாதமாக இருந்தான்.

புலனாய்வு ஊடகத்துறையில் இன்னும் வெற்றுப்பரப்பாக நீண்டு கிடக்கின்ற வெளி களை நிரப்புவதே விக்கிலீக்ஸின் ஒரே நோக்கமாக இருக்கவேண்டும். வெறும் பரபரப்புக்காக தகவல்களை வெளியிடும் மற்றைய ஊடகங்களை விடவும் விக்கி லீக்ஸின் தனித்துவம் அதன் மூலமே வெளிப்படும் என்பதே யூலியன் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தைகள். இந்த வார்த்தை களை உதட்டில் இருந்து உதிர்ப்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் செயலிலும் காட்டினான். விக்கிலீக்ஸின் அதிரடியில் முதலில் வீழ்ந்தவர்தான் இத்தொடரின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட சோமாலிய ஆன்மீகத் தலைவர்.

இரண்டாவதாக யூலியன் திறந்த இருளின் கதவு கென்யாவில். அந்தக் கதவைத் திறந்ததால் யூலியன் சாவின் வாசற் படியைக் கூடக் காண நேர்ந்தது. அப்படி என்ன இரகசியம்தான் கென்யாவில் திறக்கப்பட்டது?

(திரைகள் இன்னும் திறக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## ஊனமான என் காதல்

வீட்டின் ஜன்னலோரமாய்
அவள் வதனம் பார்த்து
உதித்தது என் காதல்!...

அமவாசை இருளில் கூட
அவள் முகவொளியிலே
புத்தகம் படித்திடலாம்
அப்படியொரு வனப்பு!...

தெருவோரமாய்
நாள் தோறும்
காத்திருந்தேன்- கண்மணி
அவள் வருகைக்காக!...

ஓர் நாள் அவள் வந்தாள்
திகைப்பில் உறைந்து



போனேன்
நடைபயின்று வருவாள்
என்றிருந்தேன்-அவளோ
வந்தாள் ஊர்ந்து கொண்டு
சக்கரநாற்காலியில்!...

*எம்.யூ.அல்சாத்*
*ஓட்டமாவடி.*



## வரலாற்றுச் சான்று

வெட்ட வெட்ட தழைப்பது தான்
தன்மானத்தமிழனம்
என்பதற்காய்
குண்டுகள் துண்டுதுண்டாய்
குரல்வளையை அறுத்த
பின்னும்
குண்டு துளைத்ததன் மீதித்
துண்டுகளாய்
நீண்டு நிமிர்ந்து நிலவுவரை
வளர்ந்திருக்கும்
வன்னியின் பனைமரங்கள் தான்
வரலாற்றுச் சான்றுகள்

*ஜனகா நீக்கிலாஸ்*
*உருத்திரபுரம்.*

## நீ



என் உயிரின்
அடையாளம் நீ
என் உணர்வுகளின்
முகவரியும் நீ
என் நினைவுகளின்
நிழற்படம் நீ
என் மௌனங்களின்
மொழிபெயர்ப்பும் நீ
சிறகுகளும் நீ
சிலுவைகளும் நீ
புன்னகையும் நீ
கண்ணீரும் நீ
காயங்களும் மருந்துகளும் நீ
என் வாழ்வின்
தொடக்கமும் முடிவும் நீ
நானே நீயான பின்னும் புரிதல்
அற்று பிரிந்து
போகிறோமே ஏனடி

*ப்ரியா*
*கொக்குவில் மேற்கு*

## நிலை யாமை



நிலையாமை வாழ்வுதனில்
நிலையாகி நிற்பதேது?
கண்ணுக்கு எட்டியவரை
எனது நிலமென்றாய்
கொட்டிக்கிடப்பதெல்லாம்
கட்டியெடுத்து எனதென்றாய்
விட்டுப் போனதெல்லாம்
பரம்பரைச் சொத்தொன்றாய்
வேப்பமரம் மட்டுமல்ல
அதன் நிழலும் எனதென்றாய்
மண்ணில் விளைந்ததையும்
மடியில் கட்டிவைத்தாய்
விண்ணில்
பறந்ததையும்
கூட்டில் அடைத்து வைத்தாய்
பத்திரங்கள்
பத்திரமாய்
பெட்டியிலே
பூட்டிவைத்தாய்
உடலோடு ஒட்டியுள்ள உயிரை
எங்கே பூட்டி வைத்தாய்?
அடுக்குமாடி கட்டினாலும்
ஆறடிப் பெட்டியே உன் கூடு
வகை வகையாய்
உணவுண்டும்
வாய்க்கருசி உனக்குண்டு
கட்டுக்கட்டாய்
பணமிருந்தும்
சில்லறை தான் கூட வரும்
கட்டிப் புரண்டு
அடிபட்டுகதிகால் நட்ட உறவு
கட்டி அழும் போது கேட்கிறதா
உன் செவியில்
நிலையில்லா உயிரைக் கொண்டு
நிலையாக வாழ்வதேது?

*அஜந்தன்*
*சுந்தர்மடம்.*

## வறுமைக் கலை

ஊர்ப் போரை தொடங்கும்
உயிரியல் நாதம்...
பார்ப்போரை உலுக்கும்
பட்டினி வேதம்...
ஆயிரம் வல்லரசானாலும்
வேரோடு பெயர்க்கும்
இந்த வறுமைக்களை
ஆய கலைகள்
அறுபத்து நான்கிற்கும்
தாய்...!



*த.பருத்தி:தாசன்.*

## கட்டாய வாக்கு!

நாம்
இவர்களால் இழந்துபோன
வாக்குகளையே இன்னமும்
எண்ணி முடியவில்லை.
அதற்குள் வருகின்றார்கள்
வக்கற்றவர்கள்
இருக்கின்ற வாக்குகளையும்
அபகரித்துப் போக
ஓ...வாக்களிப்போம்
போலிகளுக்கல்ல
எம் வாக்குகளைக்
காக்க வல்ல
காவல் வேலிகளுக்கு!




*தேனாள்*
*சுரேஸ்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் : விடிவு வருமா?

● பூமுகன்




அகிம்சை,ஆயுதம் என்று 65வருடங்கள் உருண்டோடிவிட இன்னும் தமக்கான தீர்வு கிடைக்கும் என்று போராடிக் கொண்டிருக்கும் வடக்கு கிழக்கு தமிழ்சமூகத்தின் பரிதாபம் வெளி உலகுக்கு கண்காட்சியாக மட்டுமே தெரிகிறது.
உள்ளூரில் அரசியல் செய்யும் சிலர் தமிழ்மக்களது பிரச்சினை தொடர்பில் சரியான புரிதல் இன்றியுள்ளனர். அல்லது சலுகைகளுக்காக அரசியலைமட்டும் நடத்துகின்றனர்.
எல்லாவற்றுக்கும் எதிர்கருத்து சொல்லும் ஜாம்பவான்களும் இருக்கத்தான் செய்கின்றனர். வாயில் ஒன்று செயலில் வேறொன்று புரியும் கெட்டி மனிதர்களும் நம்முடனேயே இருக்கின்றனர்.
அதுமட்டுமா?ஆட்டுக்கால் கொடுத்து அம்மிக்கல் வேண்டும் குறாப்பும் எம்மிடத்தில் இருக்கிறது.
இப்படியான வெறுமைகளும் போலிகளும் நிறைந்த அரசியல் சாக்கடையில் இருந்துகொண்டே இந்த தேசம் வற்றி வறள்கிறது.
இந்தத் தருணத்திலேயே வடக்குமாகாணத்துக்கு தேர்தல் என்ற செய்தியும்,அதில் யார் யாரை நிறுத்துவது,வாக்களிப்பது உள்ளிட்ட குழப்பங்களும் எழுந்திருக்கின்றன.
வடக்கில் தேர்தல் நடக்கக்கூடாது என்று இன்றளவும் கொக்கரிக்கும் கூட்டத்தினரும் தம்பணிசெய்கின்றனர்.
வடக்கில் தேர்தல் நடந்தால் அதில் முதலமைச்சராக இருக்க வேண்டியவரது தகுதி குறித்தும் தாம் எதிர்பார்ப்பது குறித்தும் சாதாரணமான தமிழ் மக்களிடம் கேட்டோம்.



### கிராம சேவகர் (முல்லைத்தீவு)

தம்பி என்ர பேரை பேப்பரில எழுதிப் போடாதைங்கோ...
என்ன நம்பித்தான் குடும்பம் குட்டியள் இருக்குதுகள். இங்க இப்ப முதல் மாதிரி இல்ல. அதிகாரிகளும் சரி அயல் அட்டையளும் சரி போட்டுக்குடுக்கிறது எண்டா முன்னுக்கு நிக்கினம். அதுக்கு நிறையக்காரணம் இருக்குது. அதுகள பேசினா எனக்கு வேலை போயிடும். வெளியில கட தெருவுக்கு போனா மச்சம் மாமிசம் எண்டு பாத்து சாப்பிடாம இருக்கேலா. வயுத்துப்பசிக்கு ஏதோ சாப்பிடத்தான் வேணும். அதுக்காக வீட்டிலை நாங்க புறம் பாத்தான் இயத்து வைச்சிருக்கிறம். இதவச்சு புரிஞ்சா சரி எது நடக்கும் எண்டு.
வேலகுடுக்குறம்,றோட்டு போடுறம் எண்டு பந்தாவிடுறவையள, எதிர்காலத்தில என்ன செய்யணும் எண்டுறத வெளிப்படையா சொல்ல முடியா?

### வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் (வவுனியா)

"இப்ப எல்லாம் மெஷினரிதான். வயலில வேலைக்கு வா எண்டு கேட்டா ஒருத்தரும் வாறாங்கள் இல்ல. இரண்டு பேர் வாறன் எண்டாங்கள். பிறகு வவுனியாவில ஏதோ அவசர கூட்டமாம் போகவேணும் எண்டு அவங்களும் வரல்ல.
வடக்குத் தேர்தல் எண்டு அறிவிச்சதால இப்ப கொஞ்சப் பேர் அதில பிஸி. அரசாங்கமே சொல்லிப்போட்டுது தேர்தலில கூட்டமைப்புத் தான் வெல்லப் போகுதெண்டு. பிறகேன் இவங்கள் ஓடித்திரியிறாங்கள்? ஒண்டுமா புரியல்ல. எல்லாம் ஒரு நப்பாசைதான். பின்னால திரிஞ்ச குற்றத்துக்காக அவை இரண்டுபேரையும் அவங்கள் கூப்பிட்டு ஏதோ கதைக்கிறாங்கள் போல. கொஞ்சசனம் எப்பிடியாவது முகத்தப்பாத்து தங்கட வாக்குகள போடும்.
வாக்குகள் உடைக்கத்தான் இப்ப முயற்சி நடக்குது. என்ன இருந்தாலும் தமிழ்மக்களிட பிரச்சினையைப் பற்றி தமிழ்தேசியக் கூட்டமைப்புத் தான் நியாயமா குரல் கொடுக்குது. சிலபேர் தங்கள் தமிழ் மக்களின்ர பிரதிநிதிகளா காட்டிக்கொண்டு அரசாங்கத்தின்ர நாச கார வேலையளுக்கு தானே துணை போகினம். இத சனங்கள் புரிஞ்சு கொள்ளுங்கள்."
*(இந்தக் குழு க்லந்துரையாடலில் முஸ்லிம் கட்சி ஒன்று, சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு ஆதரவாகவும் குரல் எழுப்பியது. ஆனால் ஒவ்வொரு கதைக்கும் குத்தல் கதையும் மாற்றுக் கருத்தும் சுற்றியிருந்தவர்களால் எழுப்பப்பட்டன. அந்தக் குறுகிய நேரத்தில் இரண்டு ஏக்கர் வயலை அறுவடை செய்து முடித்து விட்டது அந்த மெஸின்.*
*பொதுவாக மக்கள் கூட்டமைப்புக்கே ஆதரவைத் தெரிவிக்கும் அதே வேளை,கூட்டமைப்பினர் இன்னமும் மக்கள் மத்தியில் பணியாற்ற வேண்டும். சில தவறான வழிநடத்தல்களுக்கு மக்கள் உட்படுகிறார்கள். அவர்களுக்கு சரியாக பாதையைக் காட்டவேண்டும்.*
*முன்னரைப்போன்று தற்காலம் இல்லை. கூட்டமைப்பு இதைப்புரிந்து கொண்டு மக்கள் மத்தியில் செயலாற்றவேண்டும் போன்ற கருத்துக்களே மக்களால் முன்வைக்கப்படுகின்றன.)*

### மரக்கறி வியாபாரி (கிளிநொச்சி )



*பிழை எங்கட பக்கமே இருக்கு. தலைமையைத் தெரிவு செய்வதில் சண்டையிடுவது வெட்கப்படவேண்டிய விடயம். ஆனாலும் எமது பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய, எமக்காகவே குரல் கொடுக்கக்கூடிய சரியான ஒருவர் நிறுத்தப் படவேண்டும்.*
*வாக்கு வேண்டும்வரை ஆ...ஊ...என்று கத்துவார்கள்... வென்று விட்டால் அடுத்த கணமே வேறு உலகுக்கு அதிபதியாகி விடுவார்கள்.*
*எத்தனை தடவைகள் ஏமாற்றப்பட்டோம் என்பது எமக்குதான் தெரியும். ஒட்டுண்ணிகள் பற்றிய அரசியலை நான் கதைக்கவில்லை. அப்படி யாரைக்குறிப்பிடுகிறேன் என்பதும் உங்களுக்குத் தெரியும். தமிழ் உணர் வோடு எதிர்காலத்தில் எங்களுக்கான உரிமைகளைப் பெற்றுத்தர குரல் கொடுக்கும் ஒருவரே எமக்குத் தேவை.*
*எங்களுக்கு அரசியல் தெரியாது. ஆனால் எல்லோராலும் அடிபட்டு அனுபவசாலிகளாக இருக்கிறம் எண்டுறத யாரும் மறக்கக்கூடாது. (இப்படி பொதுப்பட பேசிய அவர் யாருக்கு ஆதரவு என்பதை சொல்ல மறுத்து விட்டார்.)*



### ஆசிரியை (சாவகச்சேரி)

" எங்கட ஆதரவு கூட்டமைப்புக்குத் தான். அதை மாத்த முடியாது. விக்னேஸ்வரன் ஐயா தான் கூட்டமைப்பில போட்டியிடுரார் எண்டு அறிவிச்சிருக்கினம். அவரைப்பற்றி முழுசா தெரியாது. சட்டத்தரணி, நீதிபதி, நீதியரசர் எண்டுற விசயம் தெரியும். ஆனா அவரின்ர பிள்ளையள் கலியாணம் செய்தது எல்லாம் சிங்கள அரசியல் வாதிகளின்ர உறவுகளாம் எண்ட விசயம் தான் கொஞ்சம் மனசில சில....
கூட்டமைப்புக்காரர் சேர்ந்துதான் அவரைத் தெரிவு செய்திருக்கினம். ஏதோ ஒரு நோக்கம் அதில கட்டாயம் இருக்கும். இதால பொதுமுடிவுக்கு மக்கள் வருவினம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

## தூக்கம் போனதே ஹன்சிகாவால்!

**ந. துளசிதா, மானிப்பாய்.**

**கே:** பித்தரே ! இந்தியாவின் உத்தரகாண்ட மாநிலத்தில் வெள்ளத்தை அனுப்பி தன்னை வழிபடாத இந்துக் களை அழிக்கப்போகிறேன் என்று யேசு கிறிஸ்து தனது கனவில் முன்னரே கூறியதாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி கூறியிருக்கிறாரே. அது பற்றி.....?



**ப:** இப்பிடி ஒரு விசயம் நடந்து முடிஞ்ச பிறகு பம்மாத்து விடுற கனபேர் எல்லா இடத்திலையும் இருக்கினம். உப்பிடிப் பாத்தால் உலகத்தில உள்ள ஆயிரத்தெட்டுக் கடவுள்மாரும் தங்கள கும்பிடாத ஆக்களை மாறி மாறி அழிச்சிருந்தா இப்ப உலகத்தில ஒரு புழு பூச்சி கூட இருந்திருக் காது. அழிக்கிறதுக்கு பேர் கடவுள் இல்ல. அன்பால ஆக்கிற சக்தி தான் கடவுள். இது இன்னமும் கன பேருக்கு தெரியேல. இப்பிடியான ஆக்கள் தான் புத்தர் சொன்னவர் எண்டு இஞ்சயும் சனத்தை கொண்டு குவிச்சவை. கேக்கிறவன் கேனையனா இருந்தால் கேப்பாபில வில தமிழ்ச் சனத்தை குடியேத்திப் போட்ட மெண்டு சொல்லுவாங்கள். இப்ப பொய்காரற்ற காலம். அது தான் உப்பிடி.

**த. சசிகுமார், நாவற்குழி.**

**கே:** ஹன்சிகாவை சிம்பு காதலிப்பதாக தகவல் கேட்டதில் இருந்து எனக்கு தூக்கமே வருவதில்லை. அது ஏன் பித்து?



**ப:** உந்தச் சினிமாக்காரற்ற காதல் எல்லாம் கொஞ்ச நாளைக்குத் தான். இப்பிடித்தான் கொஞ்சக் காலத்துக்கு முதல் உந்த சிம்புத் தம்பி நயன்தாரவோட பத்தை பறட்டையெல்லாம் சுத்தித் திரிஞ்சு, அது முறிஞ்சு, பறட்டை மாதிரி கிடந்தவர். அதுக்குப்பிறகு இப்ப சின்னக் குஷ்பு ஹன்சிகாவோட திரிய வெளிக்கிட்டுட்டார். உதுவும் எத்தினை நாளைக்கெண்டு பாப்பம். (தம்பி ! சிம்பு- ஹன்சிகா காதல் நியூஸை கேட்டதில இருந்து எனக்கும் தான் நித்திரை இல்லை. ஏதாவது மருந்து இருந்தா சொல்லுமன்.)

**பு. கதிரவேலு, கொடிகாமம்.**

**கே:** கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தமிழர்களுக்கு நல்லதா பித்தரே?



**ப:** முதல்ல ஒண்ட நீங்கள் நல்லா விளங்க வேணும். அவர் கூட்டமைப்பு வேட்பாளர் எண்டத விடவும் தலைவர் சம்பந்தன்ர வேட்பாளர் எண்டது தான் சரி. எல்லாற்ற எதிர்ப்பையும் மீறி ஜட்ஜ் ஐயாவை முதல்வர் வேட்பாளரா போட்டிருக்கிறார். சில வேளை கன பேற்றநினைப்புக்கு மாறா, விக்கினேஸ்வரன் வடக்கின்ர முதல்வரா வந்து நல்ல காரியங்கள் கனக்க நடக்கவும் கூடும். அப்பிடி நடந்தால் சந்தோசம் தான். அப்பிடி இல்லாமல் தேசியப் பட்டியல்ல தொத்திக்க கொண்டு பார்லிமண்ட் போனவர் மாதிரி சனத்தின்ர பிரச்சினையை மறந்து கிரிக்கெட் விளையாடாட்டிச் சரி.

## சொற்சிலம்பம் போட்டி இல: 579

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | ■ | 4 |
| | ■ | 5 | | ■ | ■ | 6 | |
| 7 | 8 | | ■ | 9 | 10 | | ■ |
| 11 | | ■ | ■ | 12 | | ■ | 13 |
| | ■ | 14 | 15 | | ■ | 16 | |
| ■ | 17 | | | ■ | 18 | | |
| 19 | ■ | 20 | | | ■ | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:..........................................................

விலாசம்:..........................................................

..........................................................

கையொப்பம்:..........................................................

**மேலிருந்து கீழ்**

1. பழிச்சொல்
2. ஐயம்
3. தெரு
4. இல்லம்
6. வீதி
8. திக்கு
9. கோவிலிற் பூசை செய்வோன்
10. மழைக் காலம்
13. வலோற்கார பாலியல் உறவு
14. பூமித்தாய்
15. தமிழ் மாதங்களில் இறுதியானது
16. இம்மை. மறுமை சார்ந்த
19. ஒரே

**இடமிருந்து வலம்**

1. மாற்றுத் திறனுடையோர்
5. சூழ்ச்சி
6. கடிந்துகொள்
7. தர்க்கம் செய்
9. புஷ்பங்களால் தொடுத்தது
11. ஊன்
12. ஒன்றன் பின் ஒன்றாக ஒரு ஒழுங்கில் செல்லல்
14. பூக்களை பெரும் அளவில் தூவுதல்
16. ஐந்தாம் வேற்றுமை உருபு
17. கிட்டத்தட்ட
18. விலகிப்போ
20. உடல்
21. ஆகாயத்தில் மித
22. நித்திரையில் இருந்து எழு
23. பாம்பு

### சொற்சிலம்பம் போட்டி இல. 579

சொற்சிலம்பம் 579 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்.**
**361. கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 577 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. கவலை, 2. வழி, 3. சபாநாயகர், 4. வாடுதல், 6. வேதியன், 8. பொடி, 9. முருகன், 10. வணிகம், 11. பரதேசி, 12. கபாலம், 16. சகா, 17. ஆறு

**இடமிருந்து வலம்**

1. கவச வாகனம், 5. வழிபாடு, 7. நாதம், 8. பொதி, 9. முயல், 10. வாடிய, 11. பருக, 12. கனி, 13. ரகர், 14. பாகம், 15. தேன், 16. சலம், 18. முகாம், 19. உறு,

### போட்டி இல. 576 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** கரவை சி. இராசரத்தினம், பூம்பொழில், திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

**2ஆம் பரிசு** வி. கரிகரன், மே/பா. வே. இராசநாயகம் சோறன்பற்று, பளை.

**3ஆம் பரிசு** செல்வி P. செல்வநாயகம், இல. 108-5/3, மனிங் பிளேஸ், கொழும்பு-06.

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி வசந்தா பாலேந்திரா
இல. 21, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை.
(2) எம்.எம். மலர்விழி ஜேசுதாசன்,
இயேசு இல்லம்,
இல. 155/07, ஜெம்பெட்டா வீதி,
கொழும்பு-13.
(3) திருமதி வி. மகேஸ்வரி,
விக்னேஸ்வரா வாசா,
கன்பொல்ல வீதி, கரவெட்டி.
(4) திருமதி தவளாம்பிகை நாகேந்திரன்,
இல. 11-3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை.
(5) வே. கார்த்திகேசு,
விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.
(6) சி. கிஷ்ணவேள்,
வசந்த பவனம், மருதடி மேற்கு,
சாவகச்சேரி.
(7) கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோவிலடி
வட்டுக்கோட்டை.
(8) அனுஜிற்றா தவரஞ்சன்,
பிளெசறின், நவாலி தெற்கு
மானிப்பாய்.
(9) வி. செல்வநாயகம்,
சிவன் கோவில் வீதி, புத்தூர்.
(10) க. தில்லையம்பலம்,
கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூக்குடைபட்ட முகாமையாளர்



வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. உலகின் முதல் நிலை உதை பந்தாட்ட அணியான மான்செஸ்ரர் யுனைற்ரட் அணி கத்துக்குட்டியான தாய்வான் நாட்டின் உள்ளூர் அணியொன்றிடம் மண் கவ்வியுள்ளது.

மான்செஸ்ரர் அணியை உலகின் பலம் மிக்க யாராலும் அசைக்க முடியாத அணி என்ற நிலைக்கு கொண்டு சென்றவர் அந்த அணியின் முகாமையாளரான பேர்குசன். இவர் 26 வருடங்களாக மான்செஸ்ரர் அணியின் முகாமையாளராக இருந்து அதனை வளர்த்தெடுத்து விட்டு இந்த வருடம் தான் ஓய்வு பெற்றார். இவருக்குப் பதிலாக அணியின் முகாமை யாளர் பதவியை ஏற்றிருப்பவர் டேவிட் மோயஸ். இவர் முகாமையாளராகப் பதவியேற்ற முதலாவது போட்டியில் தான் சிங் ஹோல் ஸ்ரார் என்ற சாதாரண அணியிடம் மான்செஸ்ரர் அணி எவரும் எதிர்பாராத வகையில் மண்டியிட்டுள்ளது. இதில் என்ன ஆச்சரியம் என்றால் பேர்குசன் மான்செஸ்ரர் அணியின் முகாமையாளராக 1986 இல் பதவியேற்ற பின்னர் நடைபெற்ற முதலாவது போட்டியிலும் மான்செஸ்ரர் அணி மண் கவ்வியிருந்தது. அதே போன்றே இப்பொழுது மோயஸ் முகாமையாளராக பொறுப்பேற்ற முதலாவது போட்டியிலும் மான்செஸ்ரர் அணி தோல்வியடைந்துள்ளது. பேர்குசனைப் போல தோல்வி யிலிருந்து பாடம் கற்று மான்செஸ்ரர் அணியை பழைய பலத்தோடு வழிநடத்துவரா மோயஸ்? என்பதே எல்லோரினதும் கேள்வியாகும்.

## காத்திருக்கும் சானியா



உலகின் முதல் நிலை வீராங்கனையாக வருவார் என்று எல்லோரும் ஒரு காலத்தில் இந்தியாவில் சானியா மிர்சாவை நோக்கி கைகாட்டியிருந்தனர். ரென்னிஸ் உலகில் அறிமுக மான புதிதில் தனது புயல் வேக ஆட்டத்தாலும், அதீத கவர்ச்சி யாலும் ரசிகர்களை கட்டிப் போட்டவர் சானியா மிர்சா. அடுத்தடுத்து வெற்றிகளைக் குவித்து தரவரிசைப் பட்டியலில் முன்னேறிக் கொண்டிருந்தவர். ஆனால் அதன் பின் தொடர்ச்சி யாக சறுக்கத் தொடங்கினார். இடையிடையே ஓரிரண்டு வெற்றி கள் பெற்றாலும் பெரும்பாலான போட்டிகளில் தோல்வியே சானியாவுக்கு மிஞ்சியது. இது தவிர தொடர்ச்சியான காயங்கள் ரென்னிஸ் உலகில் இருந்து அடிக்கடி அவரை ஓய்வெடுக்க வைக்கிறது. பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொயிப் மலிக்கை மணம் முடித்த பின்னரும் சானியாவின் ரென்னிஸ் பயணம் தொடரவே செய்கிறது. தொடர்ச்சியாக ஏற்படும் காயங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து ரென்னிஸ் உலகில் சாதித்து விட்டுத்தான் ஓய்வேன் என்று இன்னமும் நம்பிக்கையோடு காத்திருக்கிறார் சானியாமிர்சா.

## வேண்டும் விளையாட்டு உணர்வு



இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ருவட் ப்ரோட் ஒரு சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார். ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டியில் இவரது கையில் பட்ட பந்து, கையுறையில் முட்டி இலக்குக் காப்பாளர் ஹடினிடம் சென்றது. அந்தப்பிடியெடுப்பை ஹடின் தவறவிட்டபோதும், ஆஸி. அணித் தலைவர் மைக்கல் கிளார்க் அற்புதமாகப் பாய்ந்து அந்தப் பந்தை பிடித்தார். ஆயினும் இது பற்றி தெளிவின்மை காரணமாக நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்து விட்டார். இதேவேளை மூன்றாவது நடுவரிடமும் ஆட்டமிழப்புக்குறித்து ஆஸி. அணியால் முறையிட முடியாத நிலைமை. ஏனெனில் அவ்வாறு முறையிடுவதற்கான இரண்டு சந்தர்ப்பங்களையும் அவுஸ்ரேலியா ஏற்கனவே பயன்படுத்திவிட்டது. இந்த நிலையில் தொலைக்காட்சி மீள் ஒளிபரப்பில் ப்ரோட்டின் துடுப்பில் பந்து பட்டுச் செல்வது தெளிவாகத் தெரிந்தது. தான் ஆட்டமிழந்தது குறித்து நன்கு தெரிந்திருந்தும் களத்தை விட்டு ப்ரோட் வெளியேறாததால் அவருக்கு எதிரான கருத்து கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆயினும் தனக்கு ஆட்டமிழந்தது குறித்து உறுதியாக தெரியாததாலேயே களத்தைவிட்டு வெளியேற வில்லை என்று அவர் கூறுகிறார். விளையாட் டில் நேர்மை என்பது அவசியம். அதை விடுத்து அழுகுணி ஆட்டங்களில் இறங்கினால் அதன் உண்மைத்தன்மை தொலைந்துவிடும். விளையாட்டு வீரர்கள் இனியாவது இதை உணர்வார்களா?

## ஆமையும் அரசியலும்



இலங்கைக்கும் தென் ஆபிரிக் காவிற்கும் இடையிலான கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிவிட்டது. ஆனா லும் இலங்கை அணிக்குள் புதிது புதிதாக சர்ச்சைகள் ஏற்பட்ட வண் ணமே இருக்கின்றன. மேற்கிந்திய முக்கோணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் பந்து வீசுவதற்கு குறிப் பிட்ட நேரத்தை விடவும் தாமத மாக வீசியதால் இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் இரண்டு போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதனால் உப தலைவரான சந்திமால் தென் னாபிரிக்காவுடனான தொடரில் ஒரு நாள் அணிக்கான தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங் கையின் மிகவும் குறைந்த வயது அணித்தலைமையை பொறுப் பேற்றுக் கொண்டவர் என்ற சாத னையை சந்திமால் படைத்திருந் தாலும், அவரின் அணித்தலைமை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. அண்மைக்காலமாக பல போட்டிகளில் சந்திமால் பிரகாசிக்கத் தவறியிருந்தார். இந்த நிலையில் அணியில் அவரின் இடம் கேள்விக்குறியாக இருந்த போது, அணித்தலைமை அவரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. தலைமை என்ற கூடுதல் பொறுப்பு சுமத்தப்பட் டிருப்பதால் ஏற்கனவே தடுமாறிக் கொண்டிருந்த சந்திமால் இன்னமும் ஆட்டத்தில் சொதப்புவார் என்றே கிரிக்கெட் அவதானிகள் தெரி விக்கின்றனர். இது தவிர தொடர்ந்து ஒற்றை இலக்க ஓட்டங்களோடு வெளியேறி வந்த குஷல் பெரேரா தொடர்ச்சியாக அணியில் இடம்பிடித்து வருகிறார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலும் இவரது பெயர் முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அதன் பின்னர் எழுந்த எதிர்ப்புகளைத் தொடர்ந்து அவர் அணியின் இறுதிப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். இத்தகைய சர்ச்சைகள் அணிக்குள் பக்கச்சார்பும், அரசியலும் புகுந்து விளையாடுவதையே காட்டுகின்றன. ஆமை புகுந்த வீடும், அரசியல் புகுந்த விளையாட்டும் உருப்பட்டதாகச் சரித்திரமே கிடையாது.

# விளையாட்டு

தொகுப்பு : வரூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மறக்கமுடியாத கறுப்பு ஜூலை

இளையவன்னியன்

# கொலையுதிர் காலம்!

இந்த நூற்றாண்டின் இன அழிப்பின் அடையாளம் சிறிலங்கா, இதன் எச்சங்கள் கூந்த நூற்றாண்டுக்கும் உரியவை அதில் மிக முக்கியமானது ஜூலையில் நிகழ்ந்தேறியது. சிறிலங்கா அரச இயந்திரத்தால் மிகவும் திட்டமிட்ட முறையில் தமிழர் மீது மேற்கொள்ளப் பட்ட ஓர் கலவரமே இனப்படு கொலையாகும். அந்த இனப் படுகொலையைக் கூட மிகவும் சூசகமாக இனக்கலவரம் என்ற சொல்லாடல் ஊடாக குற்றத் தின் உச்சத்தைப் பெறுமானம் இலக்கச்செய்திருந்தது சிறிலங்கா அரசு. அதை உணராத நாமும் இதை இனக்கலவரமென்று சொல்லப் பழக்கப்பட்டு விட் டோம். அது எத்தகு வரலாற் றுத் தவறு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இனக்கலவரமென்பது குறித்த இனங்கள் ஒன்றின் மீது ஒன்று வன்முறையை மேற் கொள்ளும் செயற்பாடாகும். இங்கே தொடர்புடைய இனங் கள் வன்முறையை மேற்கொள் வதோடு பாதிப்புக்களையும் எதிர்கொள்கின்றன. இது தான் இனக்கலவரம். ஒரு இனம் அரசின்திட்டமிடலோடு மற்றொரு இனத்தாரின் மீது வன்முறை களைக் கட்டவிழ்த்து விட்டு அவர்களின் உயிரைப் பறிப்பது கலவரமல்ல அது இனப்படு கொலை. அதுதான் கறுப்பு ஜூலையில் நடந்தேறியது. இப்படி அழுத்தமாகச் சொல் லுவதற்கு ஆணித்தரமான காரணமும் உண்டு. கலவரம் என்று சொல்லப்படும் அந்த இனப்படுகொலை சம்பவத்தில் தமிழரால் ஒரு சிங்களவர் தாக்கப் பட்டதற்கோ, சிங்கள வர் சொத்துக்களைச் சேதமாக் கப்பட்டதற்கோ எந்த சாட்சி யமும், பதிவும் இல்லை. மாறாக தமிழர்களைக் கொத்துக் கொத் தாகக் கொன்றொழித்தவற்றை நேரில்க் கண்ட சாட்சியங்கள் ஏராளம். ஆக இது எப்படி கலவரமாகும்.

தமிழ் மக்களின் ஆத்மாவை முதன் முதலில் ஆழமாகப் பாதித்த சம்பவமாக கருப்பு ஜூலையைச் சொல் லலாம். 1983 ஜூலை 23ஆம் திகதி தொடங்கி பலநாட்களுக்குசிங்களம் தமிழர் மீது வன்முறை களைக் கட்டவிழ்த்து விட்டிருந்தது. சிறிலங்கா அரசின் இராணுவம் மற்றும் காவல்துறை யின் துணையோடு சிங்கள காடையர்கள் துப்பாக்கி, வெடி குண்டுகள், கத்திகள் கூரிய ஆயுதங்கள், நெருப்பு, போன்றவற் றால் தமிழர்களின் தலைகளை வெட்டியும், குத்தியும், சுட்டும், உயிரோடு வைத்து எரித் தும் கொன்று குவித்தனர்.

இரத்தமும் சதையும் நரம்புமாய் தமிழர்கள் கொத்தி பிளக்கப்பட் டார்கள், சொத்துக்கள் எரிக்கப்பட்டது, வழிபாட்டுத்தலங்கள், வியாபார நிலையங்கள் உடைத்து நொருக்கப்பட்டது. வெலிக்கடைச் சிறைச் சாலையில் 25ஆம் திகதி முப்பத்தைந்து கைதிகளும், 27ஆம் திகதி பத்தொன்பது கைதிகளுமாக ஐம்பத்து நான்கு தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுத்து வந்த தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றோரும் இவர்களுள் படுகொலை செய்யப்பட்டனர். மானிப்பாயில் பள்ளிச்சிறுவர்கள், பழம் சந்தியில் வைத்து ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழர்கள் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்படியாக மூவாயிரத்துக்கும் அதிக மானோர் கொல்லப்பட்டனர், இருப்பத்தையாயிரத்துக்கும் அதிக மானோர் காயப்பட்டனர். பதினெட்டாயிரத்துக்கும் அதிகமான வீடுகள் கடைகள் உடைக்கப்பட்டு எரிக்கப்பட்டது. 150000 பேர் அகதிக ளாக்கப்பட்டார்கள். இறுதியில் தெற்கு வாழ் தமிழர்கள் கடலால் தமிழர் பூர்வீக நிலங்களுக்கு ஏற்றி அனுப்பப்பட்டனர்.

சம்பவமொன்றை நேரில் பார்த்த நோர்வே நாட்டு சுற்றுலா பயணி ஒருவர் அதனை இப்படிக் கூறுகிறார் "அந்தக் கும்பல் பேரூந்தை நிறுத்தினார்கள் தமிழ்ப் பிரயாணிகளை அடையாளப்படுத்தினார்கள் அவர்களைக் கத்திகளால் குத்தினார்கள் அப்படியே அவர்களை உயிரோடு வைத்து அந்தப் பேரூந்தைத் தீ வைத்துக் கொழுத்தினார்கள். அதிலே இருபது பேர் இருந்திருப்பார்கள் என்றார்.

அரச இயந்திரமான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் மிக உயர்ந்த திட்டமிடலோடு இவ் இனப்படுகொலை அரங் கேறியது. அப்போது சிறிலங்காவின் ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தனா இது தொடர்பாகக் கூறும்போது "எனக்கு யாழ்ப்பாண மக்களைப் பற்றிக் கவலை இல்லை, அவர்களைப் பற்றி, அவர்களின் வாழ்க்கை பற்றி, அவர்களுடைய கருத்து பற்றி எங்களால் சிந்திக்க முடியாது. உண்மையிலேயே நான் தமிழர்களைப் பட்டினி போட்டால் சிங்கள மக்கள் சந்தோசமாய் இருப்பார்கள்" என்று இன வெறியோடு கூறியிருந்தார். 1983இல் அரசே இனப்படு கொலையின் சூத்திரதாரி என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை.



விடுதலைப்புலிகளின் திருநெல்வேலித் தாக்குதலே இவ் இனப்படுகொலைக்கு முழுக் காரணம் என அரசு விளக்கம் கூறியது. ஆனால் இதற்கு முன்பு நடந்த தமிழர் மீதான வன்முறைகள், ஜூலை படுகொலைகள் நடந்தேறிய விதம், அதன் உச்சக்கட்ட திட்டமிடல் என்பனவற்றின் அடிப் படையில்ப் பார்த்தால் அரசின் கருத்து எவ்வளவு நியாயமற்றது என்பது தெளிவான ஒன்றாகின்றது.

இப்படி காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை சிறிலங்கா செய்த வண்ணமே உள்ளது. ஆனால், தனிமனித உரிமை, சுதந்திரம், நீதி, ஜனநாயகம் பற்றிப் பேசும் யாரும் இதுவரையில் ஆக்கபூர்வமான எந்த ஒரு பாது காப்பு நடவடிக்கையையும் சர்வதேச சக்திகள் யாரும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை, காட்டிலே மானைச் சுட்டால் தண்டனை கொடுக் கிறார்கள். சர்வதேச அளவில் பாதுகாப்புச் சட்டங் கள் கூட உள்ளனவாம். காரணம் அதன் இனம் அருகி வருகிறதாம். தமிழர்களையும் சிறிலங்கா கொன்று வருகிறதே ஆக அதுவும் அருகி வரும் இனம்தானே அவர்களைக் காப்பாற்ற எந்தச் சட்டம்? அதுதான் இதுவரையில் உருவாக்கப் படவில்லை. ஒட்டுமொத்தத்தில் காட்டில் மானுக்கு இருக்கும் பாதுகாப்புக் கூட நாட்டில் தமிழனுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

தமிழின அழிப்பு, இனச் சுத்திகரிப்பு என்பதை அரசு மிகுந்த திட்டமிடலோடும், கரிசனை யோடும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. நாம் விடுதலை அடையாத இனம் விடுதலை அடையும் வரை ஏதோ ஒரு வடிவில் போராடிக்கொண் டுதான் இருக்கவேண்டும். முள்ளிவாய்க் காலில் மிகப்பெரிய இன அழிப்பு நடந்தேறி யது. அதற்கான நீதிக்காக எமது சமூகம் இன்று போராடி வருகின்றது. இந்தச் சூழலில் இதற்கு முன்பு நடந்த இனப்படுகொலைகளையும், போர்க் குற்றங்களையும் ஆவணமாக்கி அதனை ஆதாரபூர்வமாக சர்வதேசத்துக்கு அளிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ்ச் சமுகத் துக்கு உண்டு. கறுப்பு ஜூலை, செம்மணிப் படுகொலை போன்றவற்றிற்காக நீதி கேட்கக் கூடியபொறுப்புஎமக்குள்ளது இவற்றைஇருகும்பலோ, குறித்த இராணுவ வீரரோ அதனைச் செய்தார் என்று முறையற்ற நீதியை பெற்றுவிட்டு இருப் பதில் எந்தப் பலனும் எம் இனத்திற்கு கிடைக் கப்போவதில்லை. மாறாக அவற்றைப் போர்க் குற்றமாக, இன அழிப்பாக உலகுக்குச் சொல் லக்கூடிய அத்தனை ஆதாரங்களும் தமிழர் தரப்பில் உள்ளது. ஆக அவற்றை தமிழர்கள் இனியாவது விரைந்து செயற்படுத்த வேண்டும். இன்றைய கறுப்பு ஜூலை இதைத்தான் எமக்குச் சொல்லிச் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை: நிலவுக்குப் போன மாதம்



எங்களுக்கு கறுப்பான மாதமாகவே அறியப்பட்ட இந்த ஜூலை மாதம் உலகின் அதியுன்னத விஞ்ஞான பாய்ச்சல் நிகழ்ந்த மாதமுமாகும். அதுவும் சாதாரண பாய்ச்சலல்ல. அசுரப்பாய்ச்சல்.சரியாக 44 வருடங்களுக்கு முன்னர்-ஜூலை 20 ஆம் திகதிதான் மனிதக் காலடி சந்திரத்தரையில் பதிந்தது.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து நாசா விண்வெளி மையத்தின் சார்பில் 1969, ஜூலை 16ஆம் திகதி அப்பலோ 11 என்ற விண்கலம் நிலவுக்கு பயணமானது. இதில் நீல் ஆம்ஸ்ட்ரோங், மைக்கல் கொலின்ஸ் மற்றும் எட்வின் ஆல்ட்ரின் ஆகிய மூன்று விண்வெளி வீரர்கள் பயணித்தனர். இந்த விண்கலம் ஜூலை 20 ஆம் திகதி இரவு 8.17 மணிக்கு நிலவில் இறங்கியது. விண்கலத்தில் பயணம் செய்த மூன்று வீரர்களில் நீல் ஆம்ஸ்ட்ரோங், விண்கலத்தில் இருந்து இறங்கி நிலவில் முதலில் காலடி வைத்தார். இதன் அடையாளமாக, அமெரிக்காவின் தேசியக் கொடியையும் நிலவில் பறக்க விட்டார். நிலவில் கால் பதித்த முதல் மனிதர் என்ற சாதனையும் படைத்தார்.

உலகில் முதன்முதலாக, 1957ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6ஆம் திகதி மனிதன் இல்லாத,ஸ்புட்னிக் 1' எனும் செயற்கைக்கோளை சோவியத் யூனியன் விண்ணுக்கு அனுப்பி சாதனை படைத்தது. இதன்பின் 1958இல் அமெரிக்கா, முதல் செயற்கைக்கோளான எக்ஸ்புளோரர் 1 ஐ விண்ணுக்கு அனுப்பியது. சோவியத் யூனியனுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நடந்த பனிப்போரின் விளைவாக, இரு நாடுகளும் தமது பலத்தை நிரூபிக்கும் விதமாக, போட்டி போட்டு செயற்கைக்கோள்களை அனுப்பின. இறுதியில் 1969இல் அமெரிக்கா, நிலவுக்கு மனிதனை அனுப்பி இந்தப்போட்டியில் தன் ஆதிக்கத்தை முன்னிறுத்தியது.

## யார் இந்த மூன்று பேர்?



அப்போலோ விண்கலத்தை தயாரிப்பதற்கு ஆன செலவு 20 பில்லியன் டொலர்கள். இதை உருவாக்குவதற்கு 6 ஆண்டுகள் ஆனது. 195 மணி, 18 நிமிடம், 35 செக்கன்கள் இதன் பயணம் நீடித்தது. 8 நாட்களுக்குப் பின், ஜூலை 24இல் கொலம்பியாவில் விண்கலம் தரை இறங்கியது. விண்வெளியில் வீரர்கள் தங்களின் உணவுக்கு பேகர் (பன்றி இறைச்சி), சுகர் குக்கீஸ், பைன் அப்பிள் மற்றும் திராட்சை ஜூஸ் மற்றும் கோப்பி ஆகியவற்றை எடுத்துக்கொண்டனர்.சாதனை படைத்த விண்வெளிவீரர்கள் இவர்கள் தான் -

நீல் ஆம்ஸ்ட்ரோங். 1930, ஓகஸ்ட் 5 இல் பிறந்தார். 2012 ஓகஸ்ட், 25இல் மறைந்தார்.

எட்வின் ஆல்ட்ரின் 1930, ஜனவரி 20இ ல் பிறந்தார். நிலவில் இறங்கிய இரண்டாவது மனிதன் என்ற பெருமைபெற்றவர்.

மைக்கேல் கொலின்ஸ் 1930ஒக்ரோபர் 31இல் இத்தாலியில் பிறந்தார். அப்போலோ 11' பயணத்துக்கு பின், அமெரிக்காவின் நஷனல் எயார் அண்ட் ஸ்பேஸ் மியூசியத்தின் நிர்வாக இயக்குநராக பணியாற்றினார்.

உண்மையில் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் இறங்கியதாக சொல்லப்படுவது அமெரிக்காவின் திட்டமிட்ட நாடகம் என்ற கருத்துக்களையும், அதற்கு பல ஆதாரங்களையும் பலர் முன்வைத்த போதும், அவை இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.






## பண்பாட்டை மறக்காதவர்கள்




நவீன உலகில் தமது பாரம்பரியங்களை மறைத்து நாகரீகங்களால் தமதுசுயத்தைவெள்ளைக்காரத் தனமாகக் காட்டிக்கொள்பவர்களுக்குச் சாட்டையடி கொடுத்துள்ளார்கள் சுவாஸ்லாந்து நாட்டினர். அண்மையில் நடைபெற்ற ஐ.நா.அமர்வின் போது தமது பாரம்பரிய உடையுடன் வந்து கலந்து கொண்டார்கள். பாரம்பரியத்தை மறக்காத அவர்களைப் பார்த்தாவது மற்றவர்கள் திருந்துவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2013 ஜூலை 24 ஆம் திகதி வெளியிடப்பட்டது.